
பெரியார் அரசு கலைக்கல்லூரி கடலூர்

தமிழ்த்துறை- இரண்டாம் ஆண்டு

யாப்பருங்கலக்காரிகை (BTA 32) -மூன்றாம் பருவம்

தாள் - 6 இலக்கணம் - 3

அலகு - 1 - உறுப்பியல்(எழுத்து-அசை-சீர்)




# I. உறுப்பியல்

இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. முதலாவதாகிய உறுப்பியலில் அமைந்த காரிகைகள் 20. அவற்றுள் தற்சிறப்புப்பாயிரம் (1) அவையடக்கம் (2,3) நீங்கலாக அமைந்தவை 17. அக்காரிகைகளுள் 9, 11, 13, 15, 18, 20 ஆகிய ஆறும் உதாரண முதற்குறிப்புக் காரிகைகள். எஞ்சிய பதினொன்றும் எழுத்து முதல் தொடை ஈறாக அமைந்த உறுப்புக்களை நிரல்பட விளக்குகின்றன. உறுப்புக்களின் இயல்பைக் கூறுவதால் உறுப்பியல் என்பது காரணப்பெயராகும். உறுப்பியலின் இறுதியில் காரிகைகளின் முதற்குறிப்பு நினைவுக் காரிகை ஒன்றுள்ளது. அதனையும் கூட்ட இவ்வியலில் அமைந்த காரிகை 21.

## 1. எழுத்துக்கள் பற்றிய கருத்துக்கள்

**[ அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்கள் ]**

காற்றைக் கீழிருந்து மேல் எழுப்பி உண்டாக்குகின்ற காரணத்தாலும் (ஒலிவடிவம்) எழுதுகின்ற காரணத்தாலும் (வரிவடிவம்) எழுத்து அவ்வாறு அழைக்கப்படுகிறது. அவ்எழுத்து 1.குறில் 2.நெடில் 3. உயிர் 4.குற்றியலிகரம் 5.குற்றியலுகரம் 6.ஐகாரக்குறுக்கம் 7.ஆய்தம் 8.மெய் 9.வல்லினம் 10. மெல்லினம் 11.இடையினம் 12.உயிர்மெய் 13.அளபெடை எனப் பதின்மூன்று ஆகும். இவ்வெழுத்துப் பற்றிய செய்திகள் ஒரு காரிகை (4) வழி எடுத்துரைக்கப்படுகின்றன.

### எழுத்துக்களின் பெயர்வேறுபாடு

4. குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே.

(குறில்[1]நெடில்[2] ஆவி[3] குறுகிய மூஉயிர்[6] ஆய்தம்[7]மெய்யே[8]
மறுவறு மூஇனம்[11] மைதீர் உயிர்மெய்[12] மதிமருட்டும்
சிறுநுதல் பேரமர்க்கண் செய்யவாய் ஐயநுண்இடையாய்!
அறிஞர் உரைத்த அளபும்[13] அசைக்குஉறுப்(பு) ஆவனவே.

**[இ-ள்]** பிறைமதியினைத் தோற்று ஓடச் செய்கின்ற அல்லது போர் ஆடவரின் அறிவை மயக்குகின்ற பிறை போன்ற நெற்றி, இல்லையோ உண்டோ! இல்லையோ செய்கின்ற பெரிய கண்கள், சிவந்த இதழ், உண்டோ! இல்லையோ என்னும் ஐயத்தைத் தோன்றச் செய்யும் இடை ஆகியவற்றை உடையவளே! 1.குறில் 2.நெடில் 3.(என்னும் பகுப்பிற்குரியதாய் அமையும்) உயிர் 4.குற்றியலிகரம் 5.குற்றியலுகரம் 6.ஐகாரக்குறுக்கம் 7.ஆய்தம் 8.மெய் (அதன் வகையாகிய) 9.வல்லினம் 10. மெல்லினம் 11. இடையினம் 12. (உயிரும் மெய்யும் சேர்ந்தியங்கும்) உயிர்மெய் 13.அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை) என்னும் பதின்மூன்றும் அசைக்கு உறுப்புக்கள் ஆவனவாம்.]

இ-கை. மேல்அதிகாரம் பாரித்த எட்டனுள் அசைக்கு உறுப்பாம் எழுத்துக்களது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**1. குறில் :** என்பது குற்றெழுத்து;- அ, இ, உ, எ, ஒ என இவை. என்னை?

> “ ***அஇஉ***
> ***எஒ என்னும் அப்பால் ஐந்தும்***
> ***ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப.*** ” (தொல் .3)

என்றார் ஆகலின்.

**2. நெடில் :** என்பது நெட்டெழுத்து :- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என இவை. என்னை ?

> “ ***ஆ, ஈ, ஊ, ஏ, ஐ,***
> ***ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்***
> ***ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.*** ” (தொல் .4)

என்றார் ஆகலின்.

**3. ஆவி :** என்பது உயிரெழுத்து :- அவை அகர முதல் ஔகாரம் ஈறாய்க் கிடந்த பன்னிரண்டு எழுத்தும் எனக் கொள்க. என்னை ?

> “ ***ஔகார இறுவாய்ப்***
> ***பன்னீர் எழுத்தும் உயிரென மொழிப.*** ” (தொல்.9)

என்றார் ஆகலின்.

**4, 5, 6. குறுகிய மூவுயிர் ஆவன** : குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஐகாரக் குறுக்கமும் என இவை. இவை மேலே சொல்லுதும்.

**7. ஆய்தம் :** என்பது அஃகேனம். **அஃகேனம்** எனினும் ஆய்தம் எனினும் **தனிநிலை** எனினும் புள்ளி எனினும் ஒற்று எனினும் ஒக்கும். என்னை ?

> “ ***அ:.கேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி***
> ***ஒற்றுஇப் பால ஐந்தும் இதற்கே.*** ”

என்றார் ஆகலின்.



வரலாறு : எஃகு, கஃசு, ,கஃடு, கஃது, கஃபு, கஃறு என வரும். என்னை ?

> “ ***குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி***
> ***உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.*** ” (தொல்.38)

என்றார் ஆகலின்.

**8. மெய்யாவன :** ககர முதல் னகரம் ஈறாய்க் கிடந்த பதினெட்டெழுத்தும் எனக்கொள்க. என்னை ?

> “ ***னகார இறுவாய்ப்***
> ***பதினெண் எழுத்தும் மெய்என மொழிப.*** ” (தொல்.9)

என்றார் ஆகலின்.

மெய் எனினும் **உடம்பு** எனினும், **உறுப்பு** எனினும், **ஒற்று** எனினும் புள்ளி எனினும் ஒக்கும். என்னை ?

> “ ***மெய்உடம்பு உறுப்புஒற்று இவைதாம் ஒருபொருள்***
> ***செய்யும் என்று செப்பினர் புலவர்.*** ”
>
> “***மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்*** ” (தொல்.15)
>
> “***எகர ஒகரத்து இயற்கையும் அற்றே***” (தொல்.16)
>
> “ ***மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்*** ” (தொல்.46)
>
> “***மெய்உயிர் நீங்கின் தன்உரு ஆகும்***” (தொல். 139)

என்றார் ஆகலின். ஏகாரம்; எண்ணேகாரம். என்னை ?

> “***எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்***
> ***எண்ணுக் குறித்துஇயலும் என்மனார் புலவர்.*** ” (தொல். 773)

என்றார் ஆகலின்.

**9, 10, 11. மூவினமாவன :** வல்லினம், மெல்லினம், இடையினம் என இவை. வல்லினமாவன : க, ச, ட, த, ப, ற. மெல்லினமாவன : ங, ஞ, ண, ந, ம, ன. இடையினமாவன : ய, ர, ல, வ, ழ, ள. என்னை ?

> “***வல்லெழுத்து என்ப கசட தபற.*** ” (தொல்.19)
>
> “***மெல்லெழுத்து என்ப ஙஞண நமன.***” (தொல்.20)
>
> “***இடையெழுத்து என்ப யரல வழள.***” (தொல்.21)

என்றார் ஆகலின்.

மறுவறு மூவினம் என்று சிறப்பித்த அதனால், அவை உயிர்மெய்யாகிய காலத்தும் அப்பெயரானே வழங்கப்படும் எனக்கொள்க. என்னை?

"விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்."

என்றார் ஆகலின்.

**12. உயிர்மெய்யாவன :** உயிரும் மெய்யும் கூட்டி உச்சரிக்கப்பட நின்ற பன்னிரு பதினெட்டு இருநூற்று ஒருபத்தாறு எழுத்தும் எனக் கொள்க. என்னை ?

" உயிரீர் ஆறே மெய்ம்மூ வாறே
அம்மூ வாறும் உயிரொடு உயிர்ப்ப
இருநூற்(று) ஒருபத்(து) ஆறுஉயிர் மெய்யே."

" புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருஉரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயிர் இயல உயிர்த்தல் ஆறே." (தொல்.17)

"மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே." (தொல்.18)

என்றார் ஆகலின்.

மைத்ீர் உயிர்மெய் என்று சிறப்பித்த அதனால் ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க. என்னை ?

"உயிர்மெய்க்(கு) அளவும் உயிரளபு என்ப."

என்றார் ஆகலின். மதி மருட்டும்...... நுண்ணிடையாய் என்பது மகடூஉ முன்னிலை . என்னை?

வெண்பா

"இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார் – தடங்கண்ணாய்!
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்." (நாலடியார் -116)

எனப்பிறரும் தடங்கண்ணாய் என்று மகடூஉ முன்னிலை சொன்னார் உளர் எனக் கொள்க. மதி என்பது ஈண்டுப் பிறை. அஃது,

" இருகோட்டு ஒருமதி எழில்பெற மிலைச்சினை " (நக்கீரர் திருவெழுகூற்.)

என்றாற் போலக்கொள்க. அல்லதூஉம் அறிவினை மயக்கும் சிறுநுதல் முதலாகிய உறுப்புக்களை உடையாய் என்றுமாம்.

**13. அளபெடை :** அறிஞர் உரைத்த அளபும் என்பது; புலவரால் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ-று. அளபு எனினும் அளபெடை எனினும் புலுதம் எனினும் ஒக்கும். என்னை?

" அளபே புலுதம் ஆயிரு பெயரும்



அளபெடை என்ப அறிந்திசி னோரே."

என்றார் ஆகலின். அவை போக்கிச் சொல்லுதும்.

அசைக்குறுப்பாவன என்பது இப்பதின்மூன்று திறத்தெழுத்தும் அசைக்குறுப்பாம் எ-று.

"குறில்நெடில் அளபெடை உயிர்உறுப்பு உயிர்மெய்
வலிய மெலிய இடைமையோடு ஆய்தம்
இ உ ஐஎன் மூன்றன் குறுக்கமோ(டு)
அப்பதின் மூன்றும் அசைக்குஉறுப்(பு) ஆகும்."

என்றார் காக்கைபாடினியாரும் எனக் கொள்க. ஏகாரம் ஈற்றசை ; தேற்றம் எனினும் அமையும். என்னை?

" தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்ஐந்து ஏகா ரம்மே." (தொல்.742)

இனி, மூவுயிர்க் குறுக்கமும் அளபெடைகளும் ஆமாறு சொல்லுதும். அவற்றுள் குற்றியலுகரம் வருமாறு :

## குற்றியலுகரம்

நெடில் கீழும், நெடில் ஒற்றின் கீழும், குறில் இணைக் கீழும், குறில் இணை ஒற்றின் கீழும், குறில் நெடில் கீழும், குறில் நெடில் ஒற்றின் கீழும், குறில் ஒற்றின் கீழும் என்று இவ்வேழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால், அது குற்றியலுகரம் என்று வழங்கப்படும் எனக் கொள்க. என்னை?

" நெடிலே குறில்இணை குறில்நெடில் என்றுஇவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற்று இறுதிஎன்(று)
ஏழ்குற்று உகரக்கு இடன்என மொழிப."

" எழுவகை இடத்தும் குற்றிய லுகரம்
வழுவின்றி வருஉம் வல்லா(று) ஊர்ந்தே."

என்றார் ஆகலின்.

வருமாறு; நாகு, காசு, காடு, காது, காபு, காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று என நெடில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

வரகு, முரசு, முருடு, மருது, துரபு, கவறு எனக் குறில் இணைக்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு, பொரிச்சு, தெருட்டு, குருத்து, பொருப்பு, சிரற்று எனக் குறிலிணை ஒற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அசோகு, பலாசு, மலாடு, கெபாது, புதாபு, விராறு எனக் குறில் நெடில் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

தமாக்கு, தடாச்சு, பனாட்டு, கடாத்து, புதாப்பு, விராற்று எனக் குறில் நெடில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று எனக் குறில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு காண்க.

இனிக் குற்றியலுகரம் அறுவகைப்படும் என்பாரும் உளர். அவையாவன, ஈரெழுத்தொரு மொழி, உயிர்த்தொடர் மொழி, இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொடர் மொழி, மென்றொடர் மொழி என்று இவை. என்னை?

"ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்." (தொல்.406)

என்றார் ஆகலின்.

## குற்றியலிகரம்

இனிக் குற்றியலிகரம் வருமாறு :- உகரம் திரிந்தும் திரியாதும் யகரமோடு இயைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரம் என்று வழங்கப்படும். என்னை?

"வல்லெழுத்து ஆறோடு எழுவகை இடத்தும்
உகரம் அரையாம் யகரமோடு இயைபின்
இகரமும் குறுகும் என்மனார் புலவர்." (யா.வி.உரை)

"யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது." (தொல் .410)

என்றார் ஆகலின்.

வ-று: நாகியாது, காசியாது, காடியாது, காதியாது, காபியாது, காறியாது என வரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. இனித் திரியாது வந்த குற்றியலிகரம் வருமாறு. கேண்மியா, சென்மியா எனக்கொள்க . என்னை?

"குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாஎன் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே." (தொல்.34)

என்றார் ஆகலின்.



## ஐகாரக் குறுக்கம்

இனி ஐகாரக் குறுக்கம் வருமாறு:-

அளபெடுத்தற் கண்ணும் , தனியே சொல்லுதற்கண்ணும் அன்றி அல்லாத வழி வந்த ஐகாரம் தன்னளவில் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகும் எனக்கொள்க. ஐகாரம் குறுகுமிடத்து மொழி முதல், இடை, கடை என மூன்றிடத்தும் குறுகும். என்னை?

"அளபெடை தனிஇரண்(டு) அல்வழி ஐஒள
உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்." ( யா. வி. 2. நூ. உரை)

என்றார் ஆகலின்.

வ-று: ஐப்பசி - மைப்புறம் ; மடையன் - இடையன் ; குவளை - தவளை ; திணை - பனை என முதலும் இடையும் கடையும் குறுகியவாறு கண்டு கொள்க. என்னை?

"மொழிமுதல் இடைகடை எனமூன்று இடத்து
அழியாது ஐகா ரம்குறு கும்மே."

என்றார் ஆகலின்.

## அளபெடை

இனி, அளபெடை வருமாறு :- அளபெடை இரண்டு வகைப்படும். உயிரளபெடையும் ஒற்றளபெடையும் என. என்னை ?

"உயிரள பெடையும் ஒற்றள பெடையும் என்று
ஆயிரண்டு என்ப அளபெடை தானே."

என்றார் ஆகலின்.

## உயிரளபெடை

அவற்றுள், உயிரளபெடைக்குச் சொல்லுமாறு : உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும் ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும். ஒழிந்தனவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும் எனக்கொள்க. என்னை?

"குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்(து) இம்பர் ஒத்தகுற் றெழுத்தே ." (தொல். 41)

"ஐஔ என்னும் ஆயீர் எழுத்திற்கு
இகர உகரம் இசைநிறைவு ஆகும்." (தொல்.42)

என்றார் தொல்காப்பியனார்.

அவை நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும். நான்கு இடமாவன; தனிநிலையும், ஒருசொல்லின் முதனிலையும், இடைநிலையும், இறுதி நிலையும் என இவை. என்னை?

"தனிநிலை முதனிலை இடைநிலை ஈறுஎன
நால்வகைப் படூஉம்அள பாய்வரும் இடனே."

என்றார் ஆகலின்.

வ-று : ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ என இவை ஏழும் தனிநிலை அளபெடை.

ஆஅரிடம், ஈஇரிலை, ஊஉரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் என இவை ஏழும் முதனிலை அளபெடை.

படாஅகை, பரீஇயம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, அநௌஉகம் என இவை ஏழும் இடைநிலை அளபெடை.

கடாஅ, குரீஇ, கழூஉ, மிலேஎ, கடைஇ, அரோஒ, அநௌஉ என இவை ஏழும் இறுதிநிலை அளபெடை.

உயிரளபெடை எழுத்து நோக்க ஏழாம்; இடம் நோக்க நான்காம்; எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க இருபத்து எட்டாம் எனக்கொள்க.

## ஒற்றளபெடை

இனி, ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு: ஒற்றுக்களுள் ங, ஞ, ண, ந, ம, ன; வ, ய, ல, ள; ஆய்தம்(ஃ) என்னும் பதினோர் ஒற்றும் குறிற்கீழும் குறில்இணைக் கீழும் வந்து அளபெடுக்கும் எனக் கொள்க. என்னை?

"ஙஞண நமன வயலள ஆய்தம்
எனும்இவை ஈரிடத்து அளபெழும் ஒரோவழி." (யாப்பு . விருத்தி மேற்.)

"வன்மையொடு ரஃகான் ழஃகான் ஒழித்தாங்(கு)
அன்மெய் ஆய்தமோடு அளபெழும் ஒரோவழி."

என்றார் ஆகலின்.

வ-று: மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனக் குறில்கீழ்ப் பதினோர் ஒற்றும் அளபெழுந்தவாறு கண்டு கொள்க.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு எனக் குறிலிணைக்கீழ்ப் பதினோர் ஒற்றும் அளபெழுந்தவாறு கண்டு கொள்க.

இவ்இருபத்திரண்டு புள்ளி அளபெடையும் செய்யுளகத்து அல்லது பரவை வழக்கினுள் வாரா எனக் கொள்க. என்னை?



"மாத்திரை வகையால் தளைதப கெடாநிலை
யாப்புஅழி யாமைஎன்(று) அளபெடை வேண்டும்."

என்றார் ஆகலின்.

## மாத்திரை

அறிஞர் உரைத்த அளபும் என்று சிறப்பித்த அதனால் குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோஒன்று ஒரு மாத்திரை: நெட்டெழுத்து இரண்டு மாத்திரை: உயிரளபெடை மூன்று மாத்திரை: ஆய்தமும், மெய்யும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒரோஒன்று அரை மாத்திரை: ஐகாரக்குறுக்கம் ஒன்றரை மாத்திரை: மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஒரோஒன்று கால் மாத்திரை. என்னை?

"ஒன்று இரண்டு ஒருமூன்று ஒன்றரை அரைகால்
என்றனர் பொழுதுஇவை இமைநொடி அளவே."
"கண்ணிமை கைந்நொடி அளவே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே." (தொல். 7)

"ஒற்றுக்கு மாத்திரை ஒன்றே: அளபெழுந்தால்
தெற்றக் குறியதுவே யாம்."

"உன்னல் காலே; ஊன்றல் அரையே;
முறுக்கல் முக்கால்; விடுத்தல் ஒன்றே."

என்றார் பிறரும் எனக் கொள்க. [4]

## 2. அசை பற்றிய கருத்துக்கள்

எழுத்துக்களுள் ஒன்றினை மற்றொன்றனோடு சேர்த்து (ஒலித்து) இசை கொள்வதே அசை ஆகும். இது காரணப்பெயர். இதனை அவ்எழுத்து அசைத்து இசைகோடலின் அசையே என்பதால் அறியலாம். எழுத்துக்களால் அமையும் அசை 1.நேரசை 2.நிரையசை என இருவகைப்படும். அவற்றுள் நேரசை,

குற்றெழுத்துத் தனித்து வருதல் - க
நெட்டெழுத்துத் தனித்து வருதல் - கா
குற்றெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கல்
நெட்டெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கால்

என்னும் நான்கு தன்மையால் அமையும். நிரையசை,

குறில் இணைந்து வருதல் - பல
குறில் நெடில் இணைந்து வருதல் - பலா

குறில் இணைந்து ஒற்றுப்பெற்று வருதல் - படம்
குறில் நெடில் இணைந்து ஒற்றுப்பெற்று வருதல் - படாம்
என்னும் நான்கு தன்மையால் அமையும்.

ஓரெழுத்தால் அமைவது நேரசை (தனியசை). ஓர் எழுத்தோடு மற்றோர் எழுத்தை நிறைத்து - இணைத்து அமைத்துக் கொள்வது நிரையசை (இணையசை) ஆகும். அசைகளில் ஒற்றெழுத்துக்குச் சிறப்பில்லை. நேரசை ஓர் அலகு பெறும்; நிரையசை ஈர்அலகு பெறும். அசை பற்றிய கருத்துக்களை ஒரு காரிகை (5) எடுத்துரைக்கிறது.

## அசை இலக்கணம்

5. குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

**(குறிலே நெடிலே குறில்இணை ஏனைக் குறில்நெடிலே
நெறியே வரினும் நிரைந்துஒற்று அடுப்பினும் நேர்நிரைஎன்(று)
அறி; வேய்புரையும் மென்தோளி! உதாரணம் ஆ,ழி,வெள்,வேல்,
வெறியே, சுறா,நிறம், விண்தோய் விளாம்என்று வேண்டுவரே.**

**(இ -ள்)** மூங்கிலைப் போன்ற வடிவத்தைக் கொண்ட மென்மையான தோளை உடையவளே ! குறில், குறில் ஒற்று: நெடில், நெடில் ஒற்று நேரசை. குறில் இணை, குறில் இணை ஒற்று; குறில் நெடில், குறில் நெடில் ஒற்று நிரையசை என்று அறிவாயாக. இவற்றிற்கு முறையே ஆ, ழி, வெள், வேல், வெறி, சுறா, நிறம், விண்ணைத் தொடுகின்ற விளாம் என்னும் எட்டையும் எடுத்துக்காட்டுக்களாகக் கூறுவர் புலவர்.)

இ-கை. நிரல்நிறைப் பொருள்கோள் வகையால் நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றிற்கு உதாரணம் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில் நெடிலே நெறியே வரினும் நிரைந்து ஒற்றடுப்பினும் நேர்நிரை என்று அறி, என்பது குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம் . என்னை?



*"நெடில்குறில் தனியாய் நின்றும்ஒற்று அடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே."* (யாப்பருங்கலம் - 6)

*"குறில்இணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமையின் நான்காய் வரும்நிரை அசையே."* (யாப்பருங்கலம் - 8)

என்றார் ஆகலின்.

வேய்புரையும் மென்தோளி என்பது; மகடூஉ முன்னிலை. உதாரணம் ஆழிவெள்வேல் வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே என்பது; நேரசைக்கு உதாரணம் ஆ-ழி-வெள்-வேல் எனவும், நிரையசைக்கு உதாரணம் வெறி-சுறா-நிறம் -விளாம் எனவும் சொல்லுவர் புலவர் எ-று. அகலம் உரையிற் கொள்க.

அகலம் எனினும், விருத்தியுரை எனினும் ஒக்கும். என்னை?

*"அகலம் என்பது ஆசுஅறக் கிளப்பின்
விகலம் இன்றி விரித்துரைப் பதுவே."*

என்றார் ஆகலின்.

விண்டோய் விளாம் என்று சிறப்பித்த அதனால் நேரசை ஓர்அலகு பெறும்; நிரையசை ஈர்அலகு பெறும் எனக் கொள்க.

வ-று : ஆ - எனத் தனிநெடில் நேரசை ஆயினவாறு. ழி - எனத் தனிக்குறில் நேரசை ஆயினவாறு. வெள்-எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு. வேல்-என நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு. வெறி எனக் குறில் இணைந்து நிரையசை ஆயினவாறு. சுறா எனக் குறில் நெடில் இணைந்து நிரையசை ஆயினவாறு. நிறம்-எனக் குறில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு. விளாம்- எனக் குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு காண்க.

இவற்றிற்குச் செய்யுள் வருமாறு :

### நேரிசை ஆசிரியப்பா

| | |
|---|---|
| *"போது சாந்தம் பொற்ப ஏந்தி* | [போ - தனிநெடில், து - தனிக்குறில் |
| *ஆதி நாதற் சேர்வோர்* | சாந் - நெடில் ஒற்று |
| *சோதி வானம் துன்னு வாரே."* | தம் - குறில் ஒற்று] |

[பொருள் : மலர்களையும் சந்தனத்தையும் பொலிவு பெற ஏந்திச் சென்று அருகதேவனைத் (முதல் தீர்த்தங்கரரைத்) தொழுவர். அவ்வாறு செய்வோர் ஒளி பொருந்திய முத்தி உலகை அடைவர்.]
இது நேரசை நான்கும் வந்த செய்யுள்.

நிரையசை ஆசிரியப்பா

"அணிநிழ லசோகமர்ந்(து) அருள்நெறி நடாத்திய
மணிதிகழ் அவிர்ஒளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே."

[அணி- குறில்இணை
லசோ - குறில் நெடில்
கமர் - குறிலிணை ஒற்று
நடாத் - குறில் நெடில் ஒற்று]

(பொருள்: நீலமணி போலும் ஒளிவீசும் திருமேனியை உடையவன் அருகதேவன். அவன் அசோக மரத்தின் அழகிய நிழலின் கீழிருந்து நல்நெறியை அருளியவன். அவனுடைய திருவடிகளை வணங்குபவர் மீண்டும் பிறவாப் பெருநெறியாகிய முத்தி உலகைச் சேர்வர்.]

இது நிரையசை நான்கும் வந்த செய்யுள்.

குறிலே நெடிலே என்னும் இக்காரிகை தன்னையே இலக்கியமாக அலகிடினும் இழுக்காது. என்னை?

"குறிலே நெடிலே குறில்இணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே." (தொல். பொருள். 315)

என்றார் தொல்காப்பியனார்.

"கோழி வேந்தன் நேரசை; நிரையசை
யாழ்புனல் வாழ்க்கை வெறிகுரா நிறம்குரால்."

என்று உதாரணம் எடுத்து ஓதினாரும் உளர் எனக் கொள்க. **(5)**

## சீர் பற்றிய கருத்துக்கள்

நேர், நிரை என்னும் இருவகை அசைகளும் தனித்தோ தொடர்ந்தோ அளவுற அமைவது சீர். இச்சீரே இசைக்கு உதவுவதாகும். சீர் என்பதற்கு ஓசை என்பது பொருளாகும். அசைகள் பொருந்தி ஓசை புலப்பட நிற்பதால் சீர் என்பது காரணப்பெயர் ஆகும். இதனை, அசை இயைந்து சீர்கொள நிற்றலின் சீர் என்னும் கூற்று எடுத்துரைக்கிறது. இச்சீர்களைப் பற்றிய விளக்கங்கள் மூன்று காரிகைகளில் (6,7,8) எடுத்துரைக்கப் படுகின்றன. அச்சீர்கள் 30 வகைப்படும்.

ஒரு சீரில் (சொல்லில்) எத்தனை அசை இடம்பெற்றுள்ளதோ அதன் அடிப்படையில் சீர்கள் பெயர் பெறுகின்றன. அவை ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் அல்லது பொதுச்சீர், ஓரசைச்சீர் என்பவை ஆகும். நான்குக்கு மேற்பட்டுத் தமிழ் மொழியில் சீர்ப்பகுப்பு இல்லை.



### ஈரசைச்சீர் (4)

நேர், நிரை என்னும் இவ்விரு அசைகளையும் பெருக்க நால்வகை ஈரசைச்சீர்கள் பிறக்கும். அவை தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு வாய்பாடுகளைப் பெறும். இந்நான்கும் இயல்பாக அமைவன ஆதலால் இயற்சீர் எனப்பெயர் பெற்றன. ஆசிரியப்பாவிற்கு உரியதால் ஆசிரிய உரிச்சீர் என அழைக்கப்படுகிறது. ஆசிரியப்பாவை அகவற்பா என்னும் வேறுபெயராலும் வழங்குவர். ஆகையால் இது அகவல் உரிச்சீர் ஆயிற்று. ஈற்றை அடிப்படையாகக் கொண்டு தேமா, புளிமா என்பன மாச்சீர் எனப்பட்டன. இவற்றை நேரீற்று ஈரசைச்சீர் எனவும் கூறுவர். கருவிளம், கூவிளம் என்பன விளச்சீர் எனக் குறிக்கப்படுகின்றன. இச்சீர்களை நிரையீற்று ஈரசைச்சீர் எனவும் அழைப்பர்.

| | | |
|---|---|---|
| நேர் நேர் - தேமா<br>நிரை நேர் - புளிமா | மாச்சீர் (அல்லது)<br>நேரீற்று ஈரசைச்சீர் | ஆசிரிய உரிச்சீர்<br>(அல்லது)<br>அகவல் உரிச்சீர் |
| நிரை நிரை - கருவிளம்<br>நேர் நிரை - கூவிளம் | விளச்சீர் (அல்லது)<br>நிரையீற்று ஈரசைச்சீர் | |

### மூவசைச்சீர் (4+4 = 8)

தேமா முதலாகிய ஈரசைச்சீர் நான்கோடு நேர், நிரை என்னும் அசைகளைக் கூட்ட உண்டாகும் எட்டுச் சீர்கள் மூவசைச்சீர்கள் ஆகும். இவை காய்ச்சீர், கனிச்சீர் என இருவகைப்படும்.

காய்ச்சீர்: ஈரசைச்சீர்களோடு நேர் என்னும் அசையைச் சேர்க்க அவை தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்னும் வாய்பாடுகளைப் பெறும். இச்சீர்களின் ஈற்றில் காய் என்பது இடம் பெறுவதால் இவை காய்ச்சீர் ஆயின. நேர் என்பது ஈற்றசையாக முடிவதால் நேரீற்று மூவசைச்சீர் ஆயிற்று. வெண்பாவிற்குரிய சீர்கள் ஆகையால் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

| | |
|---|---|
| நேர் நேர் நேர் - தேமாங்காய்<br>நிரை நேர் நேர் - புளிமாங்காய்<br>நிரை நிரை நேர் - கருவிளங்காய்<br>நேர் நிரை நேர் - கூவிளங்காய் | காய்ச்சீர் (அல்லது)<br>நேரீற்று மூவசைச்சீர் (அல்லது)<br>வெண்பா உரிச்சீர் |

கனிச்சீர்: தேமா முதலிய ஈரசைச் சீர்களோடு நிரை என்னும் அசையைச் சேர்க்க அவை தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வாய்பாடுகளைப் பெறும். இவற்றைக் கனிச்சீர் என ஈறுபற்றிக் கூறுவர். நிரையை ஈற்றில் பெறுவதால் நிரையீற்று மூவசைச்சீர் ஆயின. வஞ்சிப்பாவிற்குரியன ஆதலால் வஞ்சியுரிச்சீர் எனச் சிறப்பிக்கப் பெறுகிறது.

நேர் நேர் நிரை - தேமாங்கனி
நிரை நேர் நிரை - புளிமாங்கனி
நிரை நிரை நிரை - கருவிளங்கனி
நேர் நிரை நிரை - கூவிளங்கனி
} கனிச்சீர் (அல்லது) நிரையீற்று மூவசைச்சீர் (அ) வஞ்சியுரிச்சீர்

**நாலசைச் சீர் (8 + 8 = 16)**

நான்கு அசையால் அமையும் சீர்கள் சிறப்பற்றவை. ஆகவே இச்சீர்களைப் பொதுச்சீர் எனக்குறிப்பர். இவை பெரும்பாலும் பாடல்களில் இடம் பெறுவதில்லை. இச்சீரால் அமைந்த பாடல்கள் மிகவும் குறைவு.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் இயற்சீர்களோடு தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்ணிழல் என்கின்ற நான்கு சீர்களையும் பெருக்க அவை 16 சீர்களாக அமையும். இங்குக் கூறப்பட்ட தண்பூ முதலானவற்றைப் பிரித்துப் பார்க்க அவையும் தேமா முதலான வாய்பாடுகளைப் பெறும்.

**பூச்சீர்கள் (8)**

தேமா முதலான நான்கனோடு தண்பூ, நறும்பூ ஆகிய இரண்டையும் உறழ எட்டுச்சீர்கள் தோன்றும். அவை ஈற்றில் பூ என முடிவதால் பூச்சீர் என வழங்கப் பெறும். நேர் என்பது ஈற்றசையாக அமைவதால் நேரீற்று நாலசைச்சீர் எனவும் குறிக்கப்பெறும்.

நேர் நேர் நேர் நேர் - தேமாந்தண்பூ
நிரை நேர் நேர் நேர் - புளிமாந்தண்பூ
நிரை நிரை நேர் நேர் - கருவிளந்தண்பூ
நேர் நிரை நேர் நேர் - கூவிளந்தண்பூ

நேர் நேர் நிரை நேர் - தேமா நறும்பூ
நிரை நேர் நிரை நேர் - புளிமா நறும்பூ
நிரை நிரை நிரை நேர் - கருவிள நறும்பூ
நேர் நிரை நிரை நேர் - கூவிள நறும்பூ
} பூச்சீர் (அல்லது) நேரீற்று நாலசைச்சீர்

**நிழற்சீர்கள் (8)**

தேமா முதலான நான்கு சீர்களோடு நறு நிழல், தண்ணிழல் ஆகிய இரண்டையும் உறழ எட்டுச் சீர்கள் தோன்றும். அவை ஈற்றில் நிழல் என முடிவதால் நிழற்சீர் எனக் குறிக்கப்பெறும். நிரை என்பது ஈற்றசையாக அமைவதால் நிரையீற்று நாலசைச்சீர் எனவும் அழைப்பர்.



நேர் நேர் நிரை நிரை - தேமா நறுநிழல்
நிரை நேர் நிரை நிரை - புளிமா நறுநிழல்
நிரை நிரை நிரை நிரை - கருவிள நறுநிழல்
நேர் நிரை நிரை நிரை - கூவிள நறுநிழல்
நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை - புளிமாந்தண்ணிழல்
நிரை நிரை நேர் நிரை - கருவிளந்தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை - கூவிளந்தண்ணிழல்
} நிழற்சீர் (அல்லது) நிரையீற்று நாலசைச்சீர்

**ஓரசைச் சீர் (2)**

நேர், நிரை என்னும் அசைகள் செய்யுளில் சீராக வருவதுண்டு. அவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றசையாக வரும். இவ்வாறு வரும் சீரை அசைச்சீர் எனவும் ஓரசைச்சீர் எனவும் கூறுவர். நேர் என்பது நாள் என்னும் வாய்பாட்டால் காட்டப் படுவதால் நாட்சீர் ஆயிற்று. நிரை என்னும் அசை மலர் என்னும் வாய்பாட்டைப் பெறுவதால் மலர்ச்சீர் எனச் சுட்டப்பெறுகிறது.

## சீர்களின் பெயரும் வகையும்

6. ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.

(ஈர்அசை நாற்சீர் அகவற்கு உரிய;[1] வெண்பா வினஆம்
நேர்அசையால் இற்ற மூவசைச்சீர்;[2] நிரையால் இறுப
வாரசை மென்முலை மாதே! வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்;[3]
ஓர்அசையே நின்றும் சீர்ஆம்;[4] பொதுஒரு நால்அசையே.[5]

(இ - ள்) கச்சினால் கட்டப்பட்ட மென்மையான மார்பினை உடைய பெண்ணே! 1. இரண்டசையினால் ஆகிய (தேமா முதலான) சீர்கள் நான்கும் ஆசிரியப்பாவிற்கு உரியனவாம் 2. அவற்றுடன் நேர் என்பதை ஈற்றில் பெற்ற சீர்கள் நான்கும் வெண்பாவிற்குரியன 3.ஈரசைச் சீருடன் நிரை என்பதை ஈற்றில் பெற்ற (தேமாங்கனி முதலான) சீர்கள் நான்கும் வஞ்சிப்பாவிற்குரிய சீர்களாம் 4. சில இடங்களில் நேரசை, நிரையசை ஆகியவை சீராகவும் கருதப் பெறும் 5. நாலசையால் ஆகிய சீர் பொதுச்சீராகும்.)

இ-கை. அவ்வசைகளால் ஆகிய சீர்களது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

ஈரசை நாற்சீர் அகவற்குரிய என்பது : இரண்டசையினால் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும் எ-று.

அகவல் எனினும் ஆசிரியம் எனினும் ஒக்கும். என்னை ?

"*அகவல் என்பது ஆசிரியப் பெயரே.*"

என்றார் ஆகலின்.

வெண்பாவினவாம் நேரசையால் இற்ற மூவசைச்சீர் என்பது ; நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும் எ-று.

நிரையால் இறுப வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர் என்பது; நிரையசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சி உரிச்சீர் எனப்படும் எ-று

வாரசை மென்முலை மாதே என்பது; மகடூஉ முன்னிலை.

ஓரசையே நின்றும் சீராம் என்பது; ஒரோவிடத்து நேரசை தானே நின்றும் சீராம்; நிரையசை தானே நின்றும் சீராம்; அவை அசைச்சீர் எனப்படும் எ-று.

பொதுவொரு நாலசையே என்பது; நாலசையினால் ஆகிய சீர் பொதுச்சீர் எனப்படும் எ-று.

நான்கு என்பதை எல்லாவற்றோடும் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க. என்னை ?

"*ஈரசை கூடிய சீர்இயற் சீர்அவை*
*ஈர்இரண்டு என்ப இயல்புணர்ந் தோரே.*" (யாப்பருங்கலம்- 11)

"*மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கவுள்*
*நேர்இறு நான்கும் வெள்ளை அல்லன*
*பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே.*" (யாப்பருங்கலம்- 12)

"*நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே.*" (யாப்பருங்கலம்- 13)

"*ஓரசைச் சீரும்அஃது ஓர்இரு வகைத்தே.*" (யாப்பருங்கலம்-14)

என்பன யாப்பருங்கலம்.

"*நாலசை யானும் நடைபெறும் ஓரசை*
*சீர்நிலை எய்தலும் சிலஇடத்து உளவே.*"

என்றார் காக்கைபாடினியார். [G]

## சீர்களுக்குரிய வாய்ப்பாடு

7\. தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.



(தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீர்அகவற்கு
ஆம்;[1] ஆம் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு;[2] அந்தம்கனியாம்
வாமாண் கலைஅல்குல் மாதே! வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்;[3]
நாமாண்பு உரைத்த அசைச்சீர்க்கு உதாரணம் நாள்மலரே.[4]

(இ-ள்) தாவுகின்ற மாண்பினை உடைய ஆடை அணிந்த அரையினை உடைய பெண்ணே! 1. தேமா (நேர்நேர்), புளிமா (நிரை நேர்), கருவிளம் (நிரை நிரை), கூவிளம் (நேர் நிரை) என்னும் நான்கு சீர்களும் ஆசிரிய உரிச்சீர்க்கு உரிய வாய்பாடுகளாம் 2. தேமாங்காய் (நேர் நேர் நேர்), புளிமாங்காய் (நிரை நேர் நேர்), கருவிளங்காய் (நிரை நிரை நேர்), கூவிளங்காய் (நேர் நிரை நேர்) எனக் காய் என்பதனை ஈறாகப் பெற்ற சீர்கள் நான்கும் வெண்பாவிற்கு உரிய வாய்பாடுகள் 3. தேமாங்கனி (நேர் நேர் நிரை), புளிமாங்கனி (நிரை நேர் நிரை), கருவிளங்கனி (நிரை நிரை நிரை), கூவிளங்கனி (நேர் நிரை நிரை) எனக் கனி என்பதனை ஈறாகப் பெற்ற சீர்கள் நான்கும் வஞ்சியுரிச்சீருக்குரிய வாய்பாடுகளாகும் 4. நாவினால் உரைக்கப்பெறும் மாண்பினை உடைய நேர், நிரை என்னும் அசைக்கு முறையே நாள், மலர் என்பன வாய்பாடுகளாகும்.)

இ-கை. முறையானே முதல் நான்கு சீருக்கும் உதாரணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீரகவற்காம் என்பது; நேர் நேர், நிரை நேர், நிரை நிரை, நேர் நிரையாகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

ஆம் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு என்பது; அவை, கடையில் காய் என்னும் சொல் பெற்றுத் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் எனவரும் நான்கு சீரும் வெண்பா உரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

அந்தம் கனியா வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர் என்பது ; அவ் ஈரசைச்சீரின் இறுதிக்கண் கனி என்னும் சொல்பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி எனவரும் நான்கு சீரும் வஞ்சி உரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

வாமாண் கலையல்குல் மாதே என்பது : மகடூஉ முன்னிலை.

நாமாண் புரைத்த அசைச்சீர்க்கு உதாரணம் நாள்மலரே என்பது : ஒரோவிடத்தாம் என்று உரைக்கப்பட்ட ஓரசைச் சீருக்கு உதாரணம் நாள் என்பதூஉம், மலர் என்பதூஉம் ஆம் என்றவாறு.

நாள் என்பது நேரசைச் சீர்க்கும், மலர் என்பது நிரையசை சீர்க்கும் உதாரணம்.

ஆம் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க.

**இன்னிசை வெண்பா**

*"அம்பு மவள்கண் வரிநெடுங்கண் ணாய்வஞ்சிக்*
*கொம்பு மவள் கொடிமருங்குல் கோங்கின்*
*அரும்பு மவள்முலை ஒக்குமே ஒக்கும்*
*கரும்பு மவள்வாயிற் சொல்."*

[பொருள்: அழகிய தலைவியின் செவ்வரி படர்ந்த கண்கள் அம்பினை ஒப்பன. ஆராய்ந்து எடுக்கப்பட்ட வஞ்சிக் கொடியை அவளுடைய இடை ஒத்திருந்தது. இலவ மரத்தின் அரும்பை அவளுடைய மார்பு ஒத்திருந்தது. அவளுடைய சொல்லோ கரும்பை ஒத்திருந்தது.]

என்னும் இப்பொய்கையார் வாக்கினுள், ஒக்கும் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற் போலக் கொள்க. [7]

## பொதுச்சீர்க்குரிய வாய்பாடு

8. தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியொடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு மொண்டளைக்கே.

[தண்நிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்துஉறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந்து அருகும்;[1] இனிஅவற்றுள்
கண்ணிய பூஇனம் காய்ச்சீர் அனைய;[2] கனியொடுஒக்கும்
ஒண்நிழல் சீர்;[3] அசைச்சீர் இயற்சீர் ஒக்கும் ஒண்தளைக்கே.[4]

**(இ-ள்)** *1.* தேமா முதலிய இயற்சீர் நான்கனோடு தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்நிழல் ஆகிய நான்கையும் சேர்த்துப் பெருக்கப் பதினாறு நாலசைச்சீர்க்கும் உதாரணமாம். இவை செய்யுளில் மிகக் குறைவாகவே இடம்பெறும் *2.* பூ என முடிபவை காய்ச்சீர் போலத் தளை கொள்ளும் *3.* நிழல் என முடிபவை கனிச்சீர் போலத் தளைகொள்ளும் *4.* ஓரசைச்சீர், ஈரசைச்சீர் போலத் தளைகொள்ளும்.]
நாலசைச் சீர்களில்,

பூ முன் நேர்; நிழல் முன் நிரை - ஒன்றிய தளை
பூ முன் நிரை; நிழல் முன் நேர் - ஒன்றாத தளை

ஓரசைச் சீர்களை ஈரசையாகக் கருத,

நேர் முன் நேர்; நிரை முன் நிரை - ஒன்றிய தளை.
நேர் முன் நிரை; நிரை முன் நேர் - ஒன்றாத தளையாம்.]



இ-கை. பொதுச்சீருக்கு உதாரணம் ஆமாறும், அவற்றது எண்ணும் பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வருங்கால் தளை வழங்கும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று.

**தண்ணிழல்.....** அருகும் என்பது; தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கனோடும்; தண்ணிழல், தண்பூ, நறும்பூ, நறு நிழல் என்னும் நான்கனையும் முறையானே கொணர்ந்து உறழ்ந்தாற் பதினாறு நாலசைச் சீருக்கும் உதாரணமாம் எ-று.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன அதிகாரத்தால் வருவித்து உரைக்கப்பட்டன.

அருகும் என்பதனால் அச்சீர் செய்யுளகத்து அருகியன்றி வாரா எனக் கொள்க. வ-று:

| | | | |
|---|---|---|---|
| தேமாந்தண்ணிழல் | தேமாந்தண்பூ | தேமாநறும்பூ | தேமா நறுநிழல் |
| புளிமாந்தண்ணிழல் | புளிமாந்தண்பூ | புளிமாநறும்பூ | புளிமா நறுநிழல் |
| கருவிளந்தண்ணிழல் | கருவிளந்தண்பூ | கருவிளநறும்பூ | கருவிளநறுநிழல் |
| கூவிளந்தண்ணிழல் | கூவிளந்தண்பூ | கூவிளநறும்பூ | கூவிளநறுநிழல் |

எனவும் கொள்க.

**இனி அவற்றுள் கண்ணிய பூவினம் காய்ச்சீர் அனைய** என்பது; அந்நாலசைச்சீர் பதினாறனுள்ளும், பூ என்னும் சொல்இறுதியாகிய நேரீற்றுப் பொதுச்சீர் எட்டும், காய் என்னும் சொல்இறுதியாகிய வெண்பா உரிச்சீரே போலக் கொண்டு வரும்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படும் எ-று.

**கனியொடு ஒக்கும் ஒண்ணிழற்சீர்** என்பது: நிழலென்னும் சொல்இறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் கனியென்னும் சொல்இறுதியாகிய வஞ்சி உரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை என்று வழங்கப்படும் எ-று.

**அசைச்சீர் இயற்சீர் ஒக்கும்** என்பது; ஓரசைச்சீர் ஆசிரிய உரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஆசிரியத் தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும் எ-று.

இயற்சீர் எனினும் ஆசிரிய உரிச்சீர் எனினும் ஒக்கும். என்னை?

*" இயற்சீ ரெல்லாம் ஆசிரிய உரிச்சீர் "*

என்றார் ஆகலின். **ஒண்தளைக்கே** என்பது; ஒள்ளிய தளை வழங்குமிடத்து எ-று.

ஒன்தலை என்பதனை இறுதி விளக்காகப் பொருளுரைத்துக் கொள்க. கண்ணிய பூவினம் என்று சிறப்பித்த அதனால் வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; ஆசிரியத்துள்ளும் குற்றுகரம் வந்துழி அன்றி வாரா; கலியினுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும். **(8)**

## உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

9. குன்றக் குறவ னகவல்பொன் னாரம்வெண் பாட்டுவஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதென் னாரள்ளற் பள்ளத்தி னோடங்கண் வானத்துமே.

(குன்றக் குறவன் அகவல்[1]; பொன்னாரம் வெண்பாட்டு[2]; வஞ்சிக்(கு)
ஒன்றும் உதாரணம் பூந்தா மரை என்ப[3]; ஓரசைச்சீர்
நன்(று)அறி வாரில் கயவரும் பாலொடு[4] நாலசைச்சீர்க்(கு)
அன்ற(து)என்னார் அள்ளல் பள்ளத்தினோ(டு) அங்கண் வானத்துமே.[5]

(இ-ள்) 1.குன்றக் குறவன் எனத் தொடங்கும் பாடல் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்துள்ளதற்கு எடுத்துக் காட்டாகும் 2. வெண்பா உரிச்சீர் பொருந்திய பாடல் பொன்னாரம் என்பதாகும் 3. பூந்தாமரை எனத் தொடங்கும் பாடல் வஞ்சிப்பாவிற்குரிய சீர்கள் நான்கும் பொருந்தியதற்கு எடுத்துக் காட்டாகும் 4. ஓரசைச்சீருக்கு நன்றறிவாரில் எனவும் பாலொடு எனவும் தொடங்குகின்ற பாடல்கள் மேற்கோள்களாகும் 5. அள்ளற் பள்ளம், அங்கண் வானத்து என்பன நாலசைச்சீர் இடம்பெற்ற பாடல்களாகும்.)

இ-கை. முறையானே ஐந்து வகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதல்நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**1. குன்றக் குறவன் அகவல்**

| | |
|---|---|
| *"குன்றக் குறவன் காதல் மடமகள்* | ( குன்/றக் - நேர்/நேர் - தேமா |
| *வரையர மகளிர் புரையும் சாயலள்* | குற/வன் - நிரை/நேர் - புளிமா |
| *ஐயள் அரும்பிய முலையள்* | மட/மகள் - நிரை/நிரை - கருவிளம் |
| *செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே."* | சா/யலள் - நேர்/நிரை - கூவிளம்) |

(ஐங்குறுநூறு - 255)

இந்நேரிசை ஆசிரியப் பாவினுள் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.



**2. பொன்னாரம் வெண்பாட்டு**

| | | |
|---|---|---|
| *"பொன்னார மார்பில் புனைகழற்கால் கிள்ளிபேர்* | (பொன்/னா/ர நே/நே/நே | தேமாங்காய் |
| *உன்னேனென் றாழ் உலக்கை பற்றினேற் – கென்னோ* | புனை/கழற்/கால் நி/நி/நே | கருவிளங்காய் |
| *மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்* | னேற்/உலக்/கை நே/நி/நே | கூவிளங்காய் |
| *புனல்நாடன் பேரே வரும்."* | மன/னோ/டு நி/நே/நே | புளிமாங்காய்) |

(பொருள் : பொன்னாலாகிய ஆத்தி மாலையையும் அழகிய வீரக் கழலை அணிந்த கால்களையும் உடையவன் சோழ மன்னன். அவனுடைய மாலையைப் பெற விரும்பினாள் ஒரு தலைவி. அது கிடைக்காமையால் அவள் அச்சோழன் மீது ஊடல் கொண்டாள். அதன் காரணமாக இனிச் சோழனை நினைத்தும் பார்க்கக் கூடாது என்று உறுதி கொண்டிருந்தாள். அவள் உலக்கையை எடுத்து முறையாக நெல் குற்றத் தொடங்கினாள். அப்போது உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வரும் காவிரி நாடனாகிய சோழனின் பெயரை வாய் கூறியது. மனமும் அவனையே நினைத்துக் கொண்டிருந்தது.)

இந்நேரிசை வெண்பாவினுள் வெண்பா உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.

**3. வஞ்சிக்கொன்றும் உதாரணம் பூந்தாமரை என்ப**

| | |
|---|---|
| *"பூந்தாமரைப் போதலமரத்* | (பூந்/தா/மரை - நே/நே/நி - தேமாங்கனி |
| *தேம்புனலிடை மீன்திரிதரும்* | தேம்/புன/லிடை - நே/நி/நி - கூவிளங்கனி |
| *வளவயலிடைக் களவயின் மகிழ்* | வள/வய/லிடை - நி/நி/நி - கருவிளங்கனி |
| *வினைக் கம்பலை மனைச்சிலம்பவும்* | வினைக்/கம்/பலை - நி/நே/நி - புளிமாங்கனி) |
| *மனைச்சிலம்பிய மணமுரசொலி* | |
| *வயற்கம்பலைக் கயலார்ப்பவும்* | |

நாளும்
*மகிழ மகிழ்தூங் கூரன்*
*புகழ்த லானாப் பெருவண் மையனே"*

(பொருள் : இனிய நீர்நிலைகளில் பொலிவுடன் காணப்பட்ட தாமரை அரும்புகள் சுழலும்படியாக மீன்கள் அங்குமிங்குமாகத் திரிந்தன. வளம் நிறைந்த வயல்களின் இடையில் அமைந்த நெற்களத்தில் வேலை செய்வோர் ஏற்படுத்திய ஓசை வீடுகளில் சென்று ஒலித்தது. தலைவனின் வீட்டில் முழக்கிய திருமண முரசின் ஒலி வயல்பக்கம் சென்று ஒலித்தது. அவ்வொலியைக் கேட்டு வயல்களில் இருந்த கயல்மீன்கள் அச்சத்தால் துள்ளிக் குதித்தன. இவ்வாறாக நாள்தோறும்

# அலகு -2-உறுப்பியல்-(தளை-அடி-தொடை)



இதனுள், நேரீற்றுப் பொதுச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும், நிரையீற்றுப் பொதுச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும், ஒன்றாவிடினும் வஞ்சித் தளையாகவும் கொண்டு வழங்கப்படும் எ-று. இவ்வாறு பிறரும்

> ***"குன்று கூதிர் பண்பு தோழி***
> ***விளிவிசை முத்தூழ் என்றிவை எல்லாம்***
> ***தெளிய வந்த செந்துறைச் செந்துறை."***

என்று உதாரணம் எடுத்து ஓதினார் எனக் கொள்க.
அன்றதென்னார் என்பதை அன்ற வென்னார் எனக்கொள்க. (9)

## தளை பற்றிய செய்திகள்

தளை என்னும் சொல்லுக்குக் கட்டுவது அல்லது பொருந்துவது என்பது பொருளாகும். கட்டுதலைத் தளைதல் என்றும் உலக வழக்கில் கூறுவர். சீர்கள் ஒன்றையொன்று தொடரும் முறைக்கு யாப்பு நூலார் தளை எனப் பெயரிட்டனர். இசையைத் தோற்றுவிக்கின்ற சீர்கள் ஒன்றோடொன்று கூட்டப்பட்டு இசை தொடர்ச்சி தோன்ற அமைக்கப்படுவதே தளையின் பயனாகும். நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியோ ஒன்றாமலோ அமையினும் அது தளை என்றே வழங்கப்படும். நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றாக அமைவது ஒன்றிய தளையாகும். மாறுபட்டு அமைவது ஒன்றாத தளையாகும். ஒன்றிய தளைகள் வருவதே பாடலுக்குச் சிறப்பைத் தரும். அவை 1.நேரொன்றாசிரியத்தளை 2.நிரையொன்றாசிரியத்தளை 3.வெண்சீர்வெண்டளை 4.ஒன்றிய வஞ்சித்தளை என நான்காகும். சிறப்பற்றதாகக் கருதப்படும் பொருந்தாத தளைகள் மூன்று. அவை 1.இயற்சீர் வெண்டளை 2.கலித்தளை 3.ஒன்றாத வஞ்சித்தளை என்பனவாகும். சீர்கள் தளை கொள்ளும் நிலையை,

| | | |
|---|---|---|
| 1. மா முன் நேர் | - நேரொன்றாசிரியத்தளை | ஒன்றிய தளை |
| 2. விளம் முன் நிரை | - நிரையொன்றாசிரியத்தளை | |
| 3. காய் முன் நேர் | - வெண்சீர் வெண்டளை | |
| 4. கனி முன் நிரை | - ஒன்றிய வஞ்சித்தளை | |
| 5. மாமுன் நிரை<br>விளம் முன் நேர் | இயற்சீர் வெண்டளை | ஒன்றாத தளை |
| 6. காய் முன் நிரை | - கலித்தளை | |
| 7. கனி முன் நேர் | - ஒன்றாத வஞ்சித்தளை | |



எனக் கொள்ளலாம். தளைகளைப் பற்றிய செய்திகளை ஆசிரியர் ஒரு காரிகையில் (10) எடுத்துரைக்கிறார்.

### தளைகளின் வகைகள்

10. **தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி**
**வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த**
**வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்**
**ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.**

**[தண்சீர் தனதுஒன்றில் தன்தளையாம்;[1] தணவாத வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக்(கு) உரித்து;[2] வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளை யாய்விடும்;[3] வெண்தளையாம் ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும்;[4] ஒண்ணுதலே!**

**(இ-ள்)** ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்ணே! 1. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றாய்ப் பொருந்துவதே சிறப்புடைய தளை என்று கூறப்படும் தன்தளையாகும் 2. தேமாங்கனி முதலாகிய வஞ்சியுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசை நேராய் அமைவது சிறப்பில்லாத ஒன்றாத வஞ்சித்தளையாகும் 3. வல்லோரால் வகுத்துக் கூறப்பட்ட வெண்பாவிற்குரிய தேமாங்காய் முதலாயின சீர்கள் நிற்க வருஞ்சீரின் முதலசை நிரையெனப் பொருந்தாமல் நிற்பது கலித்தளை ஆகும் 4. தேமா முதலாகிய ஆசிரிய உரிச்சீர் நின்று மாமுன் நிரையும் விளமுன் நேரும் என மாறி நிற்பதும் வெண்பாவிற்குரிய இயற்சீர் வெண்டளையாம்.]

இ-கை. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றுவதும் ஒன்றாததுமாகிய ஏழ்தளையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**தண்சீர் தனதொன்றில் தன்தளையாம்** என்பது; தன் சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது தன்தளையாம் எ-று. எனவே, ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு நேராய் ஒன்றுவது நேரொன்றாசிரியத் தளையாம் ; நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத் தளையாம். வெண்பா உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்தளையாம். வஞ்சி உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம் எ-று.

**தணவாத** என்று மிகுத்துச் சொல்லிய அதனால் தன் சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவதூஉம் தன் தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க.

வஞ்சிவண்சீர் விகற்பமும் வஞ்சிக்கு உரித்து என்பது; வஞ்சி உரிச்சீர் நின்று தன்வரும் சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித் தளையாம் எ-று.

வண்சீர் என்று சிறப்பித்த அதனால் வஞ்சி உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க.

வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளையாய் விடும் என்பது; வெண்பா உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றாதது கலித்தளையாம் எ-று.

வல்லோர் வகுத்த என்று சிறப்பித்த அதனால் வெண்பா உரிச்சீர் நின்று பிறிதாகி வரும் சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் கலித்தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க.

வெண்தளையாம் ஒண்சீரகவல் உரிச்சீர் விகற்பமும் என்பது; ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வரும்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்தளையாம் எ-று.

ஒண்சீர் என்று சிறப்பித்த அதனால் ஆசிரிய உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் இயற்சீர் வெண்தளையே சிறப்பின்று ஆயினும் எனக்கொள்க. என்னை ?

*"இயற்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்*
*விகற்பம் இலவாய் விரவி நடப்பின்*
*அதன்பெயர் ஆசிரி யத்தளை ஆகும்."*

*"இயற்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்*
*விகற்ப வகையது வெண்தளை ஆகும்."*

*"உரிச்சீர் அதனுள் உரைத்தவை அன்றிக்*
*கலக்கும் தளையெனக் கண்டிசி னோரே."*

*"வெண்சீர் இறுதியின் நேரசை பின்வரின்*
*வெண்சீர் வெண்டளை ஆகும் என்ப."*

*"வெண்சீர் இறுதிக்கு இணையசை பின்வரக்*
*கண்டன எல்லாம் கலித்தளை ஆகும்."*

*"தன்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்ஒத்(து)*
*ஒன்றினும் ஒன்றா(து) ஒழியினும் வஞ்சியின்*
*பந்தம் எனப்பெயர் பகரப் படுமே."*

என்றார் காக்கைபாடினியார். ஒண்ணுதலே என்பது ; மகடூஉ முன்னிலை.





## உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

11. திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளறு வஞ்சிமந் தாநில மென்பமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே.

[திருமழை[1] உள்ளார்[2] அகவல்; சிலைவிலங்கு[3] ஆகும்வெள்ளை;
மருளறு வஞ்சிமந்தா நிலம் என்ப;[4]மைதீர் கலியின்
தெரிவுறு பந்த நல்லாய்! செல்வப்போர்க் கதக்கண்ணன் என்பது;[5]
உரிமையின் கண்ணின்மை[6] ஓரசைச் சீருக்(கு) உதாரணமே.

**(இ-ள்)** நல்ல பெண்ணே ! 1. திருமழை எனத் தொடங்கும் பாடல் நிரையொன்றாசிரியத் தளையால் அமைந்தது 2.உள்ளார் என்பது நேரொன்றாசிரியத் தளை பொருந்தியது 3.சிலை விலங்கு என்னும் பாடல் இயற்சீர், வெண்சீர் வெண்டளைகள் இடம்பெற்ற பாடலாகும் 4.குற்றமற்ற ஒன்றிய, ஒன்றாத வஞ்சித்தளை வந்ததற்கு மந்தாநிலம் எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாகும் 5.மயக்கம் தீர்ந்த கலிப்பாவிற்கு உரிய கலித்தளை அமைந்ததற்கு உரிய செய்யுள் செல்வப்போர்க் கதக்கண்ணன் என்பதாகும் 6.உரிமையின் கண்ணின்மை எனத் தொடங்கும் பாடல் ஓரசைச்சீர் பயின்று வந்ததற்குரிய எடுத்துக்காட்டாகும்.]

இ-கை. அத்தளைகளான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**திருமழை உள்ளார் அகவல்**

**ஆசிரியப்பா**

1. *"திருமழை தலைஇய இருணிற விசும்பின்*
*விண்ணதிர் இமிழிசை கடுப்பப்*
*பண்ணமைத் தவர்தேர் சென்ற வாறே."*

(திரு/மழை - நி/நி → கருவிளம்
தலை - நிரை
விளம் முன்நிரை
நிரையொன்றாசிரியத்தளை)

[பொருள் : மழையைத் தருகின்ற கார்முகில் விண்ணிடத்தே இடியோசையைத் தோற்றுவிக்கும். அவ்விடியோசையை ஒத்த ஓசைப்புலப்படும்படி ஒப்பனை செய்யப்பட்ட தலைவரின் தேர் விரைந்து சென்றது.]

இது நிரையொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

ஆசிரியப்பா

2. "உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவளம் ஏய்க்கும்
அரில்படு கள்ளியம் காடிறந் தோரே."
(ஐங்குறுநூறு-2)

(உள்/ளார் } தேமா
நே/நே
கொல் - நேர்
மாமுன்நேர்
நேரொன்றாசிரியத்தளை)

இது நேரொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

**சிலை விலங்காகும் வெள்ளை**

வெண்பா

3. "சிலைவிலங்கு நீள்புருவம் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் – மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது"

(சிலை/விலங்/கு } தேமாங்காய்
நி/ நி/ நே
நீள்- நேர் → காய்முன்நேர்
வெண்சீர்வெண்டளை

றென்/று } தேமா
நே/நே
முனி - நிரை → மாமுன்நிரை
இயற்சீர் வெண்டளை)

(பொருள் : பலவகை மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட தாரினையும் மாலையினையும் அணிந்த தலைவனே! மலை போலும் மார்பினை உடையவனே! தலைவி நின்னோடு கூடி முயங்குவாள். அக்காலத்து அவளுடைய பருத்த கொங்கை உங்கள் இருவருக்குள் இடைவெளியை ஏற்படுத்துவதாக எண்ணுவாள். அதனால் பொறுத்துக் கொள்ளாதவளாய் வில் போல் வளைந்த புருவம் நெற்றி மீது ஏறி ஓடியும்படியாக அதனைச் சினந்து பார்ப்பாள். அத்தகு தன்மை கொண்ட தலைவியை விடுத்து நீ பிரிந்து செல்லப் போகின்றாய். இனிவரும் இருளொடு கூடிய மாலைக் காலத்துத் தலைவி அடையும் தனிமைத் துயரத்தைப் பொறுத்துக் கொள்வாளோ ? கூறுக.)

இது வெண்சீர் வெண்டளையானும் இயற்சீர் வெண்டளையானும் வந்த செய்யுள்.



**மருளறு வஞ்சி மந்தாநிலம் வந்து**

வஞ்சிப்பா

4. "மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு,
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே."

(மந்/தா/நிலம் } தேமாங்கனி
நே/ நே/ நி
வந்- நேர்
கனி முன் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை
வெண்/சா/மரை } தேமாங்கனி
நே/நே/ நி
புடை -நி
கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை)

(பொருள் : தென்றற் காற்று வீசி அசைந்தது. வெண்மையான சாமரைகள் பக்கங்களில் உலவின. நாள்தோறும் மலர்கின்ற புதிய செந்தாமரை மலர்மீது அருகதேவன் இனிதாக நடந்தனன். அவனை மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் வணங்கி மகிழ்வோம்.)

இது மயக்கமற வகுத்த வஞ்சித்தளை ஒன்றாததூஉம் ஒன்றியதூஉமாக வந்த செய்யுள்.

**மைதீர் கலியின் தெரிவுறு பந்தம் செல்வப்போர்க் கதக்கண்ணன்**

கலிப்பா

5. "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

(செல்/வப்/போர் } தேமாங்காய்
நே/ நே/ நே
கதக் - நிரை → காய்முன்நிரை
கலித்தளை)

பொருள்: போர்க்களத்தின் கண்ணே கதக்கண்ணன் என்னும் அரசன் தன் பகைவர் மீது வெகுண்டு சக்கரப்படையை எறிந்தான். அரசனின் சினத்தைத் தாங்கிய அப்படை வெற்றி மாலை அணிந்த வீரம் செறிந்த மன்னரின் மணிமுடியுடன் கூடிய தலையை வெட்டி வீழ்த்தியது. அத்துடன் வளப்பம் செறிந்த பெரிய யானையின் மார்பினை அறுத்துக்கொண்டு உள்ளே சென்றது. இக்காட்சி எல்லையற்ற கடலின்கண் நீரை உண்ணவந்த கரிய மேகத்தின் இடையில் நுழைந்த முழுநிலாவை ஒத்திருந்தது.)

இது மயக்கமில்லாக் கலித்தளையான் வந்த செய்யுள். நல்லாய்! என்பது; மகடூஉ முன்னிலை.

**உரிமையின் கண்ணின்மை ஓரசைச் சீருக்கு உதாரணம்**

6. *"உரிமை யின்கண் யின்மையால்*
*அரிமதர் மழைக் கண்ணாள்*
*செருமதி செய் தீமையால்*
*பெருமை கொன்ற என்பவே."*

[பொருள் : தலைவியின் கடைக்கண் பார்வை என்மீது விருப்பம் கொண்டதாக அமையவில்லை. குளிர்ச்சி பொருந்திய அக்கண்கள் செவ்வரி படர்ந்து மதர்த்துத் திரிவன. அவற்றைத் தாங்கிய நிலவு போன்ற முகமும் எனக்குத் தீமையைத் தருகிறது. இவை அனைத்தும் என் பெருமையைக் கெடுத்தன.]

இம்முச்சீரடி வஞ்சி விருத்தத்துள் மழை என்னும் நிரையசைச்சீர் இயற்சீரே போல நின்று வரும்சீர் முதலசையோடு ஒன்றாமையின் இயற்சீர் வெண்தளையாயிற்று. செய்யென்னும் நேரசைச்சீர் இயற்சீரே போல நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினமையின் ஆசிரியத்தளை ஆயிற்று.

[இப்பாடலில் செருமதி செய் தீமையால் என்னும் தொடரில் அமைந்த செய் என்பது ஓரசைச் சீராகும். அதனை ஈரசைச்சீராகக் கருத வேண்டும். இவ்வசையின் முன் நேரோ நிரையோ இருப்பதாக எண்ணித் தளைகொள்ள,

நேர் நிரை - செய் (நேர்) - தேமா புளிமா

என நின்று வருஞ்சீரின் முதலசையாகிய தீ என்பதோடு மாமுன்நேர் என நேரொன்றாசிரியத் தளையாகும். அரிமதர் மழைக்கண்ணால் என்பதில் மழை நிரையசையாகும். அது,

நேர் நிரை - மழை (நிரை) - கூவிளம் கருவிளம்

என நின்று வருஞ்சீரின் முதலசையாகிய கண் என்பதோடு விளமுன் நேர் என இயற்சீர் வெண்டளையாகும்.] **[11]**

## அடி பற்றிய கருத்துக்கள்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து நிற்பது அடி எனக் கூறப்படுகிறது. சீர்கள் இணைந்த தளைகள் பொருந்தி நின்று அடுத்து நடப்பதால் அடி அவ்வாறு அழைக்கப்படுகிறது. அடி என்பது காரணப் பெயராவதை **அத்தளை அடுத்து நடத்தலின் அடியே** என்னும் தொடர் எடுத்துரைக்கிறது. ஓரடியில் அமையும் சீர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடிகள் பல பெயர்களைப் பெறுகின்றன. அவற்றை ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.



1. இரண்டு சீர்களைக் கொண்டது - குறளடி
2. மூன்று சீர்களைக் கொண்டது - சிந்தடி
3. நான்கு சீர்களால் அமைவது - அளவடி (அ) நேரடி
4. ஐந்து சீர்களைப் பெற்றது - நெடிலடி
5. ஆறும் அதற்கு மேலும் சீர்களைப் பெறுவது - கழிநெடிலடி

இவ்வைந்து அடிகளுள் கழிநெடிலடியைத் தனியே குறிக்காமல் அவை பெறும் சீர்களுக்கு ஏற்ப அறுசீர்க் கழிநெடிலடி, எழுசீர்க் கழி நெடிலடி, எண்சீர்க் கழிநெடிலடி என அடை கொடுத்துக் கூறுவர். இவ்வடிகளுக்குரிய விளக்கத்தை ஆசிரியர் ஒரு காரிகையில் (12) விளக்குகிறார்.

### அடிவரையறை

வெண்பா முதலான பாக்களை இத்துணை அடிகளில் பாடவேண்டும் என வரையறுத்துக் கூறுவதே அடிவரையறையாகும்.

### சிற்றெல்லை

| | | |
|---|---|---|
| வெண்பா | - | இரண்டடி |
| வஞ்சிப்பா | - | மூன்றடி |
| ஆசிரியப்பா | - | மூன்றடி |
| கலிப்பா | - | நான்கடி |

### பேரெல்லை

நால்வகைப் பாக்களுக்கும் பேரெல்லை இத்துணை அடி என்ற வரையறை இல்லை. அவை பாடுவோனின் பொருளுக்கு ஏற்ப எத்துணை அடிகளில் வேண்டுமென்றாலும் பாடலாம். இக்கருத்துக்களை ஆசிரியர் ஒரு காரிகையில் (14) குறிப்பிடுகின்றார்.

## அடிகளும் அவற்றின் பெயர்களும்

12. குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

[குறள்இரு சீர்அடி;[1] சிந்து முச்சீர்அடி;[2] நால்ஒருசீர்
அறைதரு காலை அளவொடு நேரடி;[3] ஐயொருசீர்
நிறைதரு பாத நெடிலடிஆம்;[4] நெடுமென் பணைத்தோள்
கறைகெழு வேல்கண் நல்லாய்! மிக்க பாதம் கழிநெடிலே[5].

**(இ-ள்)** நீண்ட மென்மையான மூங்கிலை ஒத்த தோளையும் குருதிக் கறை படிந்த வேலினைப் போன்று பக்கம் சிவந்த கண்ணையும் கொண்டு நன்மை செய்யும் பெண்ணே! 1.இரண்டு சீரால் அமைவது குறளடி 2.மூன்று சீரால் அமைவது சிந்தடி 3. நான்கு சீரால் அமைவது அளவடி அல்லது நேரடியாம் 4.ஐந்து சீரால் அமைவது நெடிலடி 5.ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் அமைவது கழிநெடிலடியாகும்.]

இ-கை. அத்தளைகளான் வந்த அடிகளது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

குறளிரு சீரடி என்பது : இருசீரான் வந்த அடி குறளடி எனப்படும் எ-று. சிந்து முச்சீரடி என்பது : முச்சீரான் வந்த அடி சிந்தடி எனப்படும் எ-று.

நாலொரு சீர் அறைதரு காலை அளவோடு நேரடி என்பது; நாற்சீரான் வந்த அடி அளவடி என்றும் நேரடி என்றும் சொல்லப்படும் எ-று. ஐயொருசீர் நிறைதரு பாத நெடிலடியாம் என்பது; ஐஞ்சீரான் வந்த அடி நெடிலடி எனப்படும் எ-று.

நெடுமென் பணைத்தோள் கறைகெழு வேற்கண் நல்லாய் என்பது; மகடூஉ முன்னிலை.

மிக்க பாதம் கழிநெடில் என்பது; ஐஞ்சீரின் மிக்க சீரான் வரும் அடி எல்லாம் கழிநெடிலடி எனப்படும் எ-று.
அகலம் உரையில் கொள்க. என்னை ?

*"குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்*
*அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்*
*நிரனிறை வகையான் நிறுத்தனர் கொளலே."* (யாப்பருங்கலம் - 24)

*"கழிநெடில் அடியே கசடறக் கிளப்பின்*
*அறுசீர் முதலா ஐயிரண்டு ஈறா*
*வருவன பிறவும் வகுத்தனர் கொளலே."* (யாப்பருங்கலம் - 25)

**(12)**

## உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

13. திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றான்வினையின்
இரைக்குங் கணிகொண்ட மூவடிவோடிடங் கொங்குமற்றுங்
கரிக்கைக் கவான்மருப் போர்முலை மாதர் கழிநெடிலே.



(திரைத்தஇருது குறள்;[1] சிந்து;[2] அளவடி தேம்பழுத்து;[3]
விரிக்கு நெடிலடி வேல்நெடுங் கண்ணிவென்றான் வினையின்;[4]
இரைக்கும்;[5] கணிகொண்ட;[6] மூவடிவோடு;[7] இடம்;[8] கொங்கு;[9] மற்றும்
கரிக்கைக் கவான் மருப்பேர் முலைமாதர் கழிநெடிலே.

**(இ-ள்)** வேல்போன்ற நீண்ட கண்ணைக் கொண்டவளே ! யானையின் துதிக்கை போன்ற தொடையையும் அவ்யானையின் தந்தத்தைப் போன்று ஏந்திய அழகினைப் பெற்ற மார்பையும் உடைய பெண்ணே! 1. திரைத்த எனத் தொடங்கும் பாடல் குறளடிக்கு எடுத்துக்காட்டாகும் 2. இருது என்பது சிந்தடியான் அமைந்த செய்யுளாகும் 3.அளவடியான் அமைந்த பாடல் தேம்பழுத்து எனத் தொடங்குவதாகும் 4.வென்றான் வினையின் எனத் தொடங்கும் பாடல் விரித்துக் கூறப்படும் நெடிலடியான் அமைந்ததாகும் 5.இரைக்கும் எனத் தொடங்கும் பாடல் அறுசீர்க் கழிநெடிலடிக்கு உரியது 6.எழுசீர்க் கழிநெடிலடிக்குக் கணி கொண்ட என்பது எடுத்துக்காட்டாகும் 7.மூவடி எனத்தொடங்கும் பாடல் எண்சீர்க் கழிநெடிலடியைப் பொருந்தியதாகும் 8.இடம் என்னும் பாடல் ஒன்பதின்சீர்க் கழிநெடிலடிக்கு உரியது 9.கொங்கு எனத் தொடங்கும் பாடல் பதின்சீர்க் கழிநெடிலடியான் அமைந்த செய்யுள் ஆகும்.]

இ-கை. அவ்அடிகளான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

### திரைத்த குறள்

**வஞ்சித்துறை**

1. *"திரைத்த சாலிகை*
*நிரைத்த போனிரந்*
*திரைப்ப தேன்களே*
*விரைக்கொள் மாலையாய்."* (சூளாமணி . சீயவதை. பா.172)

இது குறளடியான் வந்த செய்யுள்.

### இருது சிந்து

**வஞ்சி விருத்தம்**

2. *"இருது வேற்றுமை இன்மையாற்*
*சுருதி மேற்றுறக் கத்தினோ*
*பரிது வேற்றுமை யாகவே*
*கருது வேற்றடங் கையினாய்."* (சூளாமணி . சீயவதை. பா.170)

இது சிந்தடியான் வந்த செய்யுள்.

**அளவடி தேம்பழுத்து**

3. "தேம்பழுத் தினியநீர் மூன்றும் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தன் ஈட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே." (சூளாமணி .நகர்.1

இஃது அளவடியான் வந்த செய்யுள்.

**விரிக்கு நெடிலடி வென்றான் வினையின்**

**விருத்தக் கலித்துறை**

4. "வென்றான் வினையின் தொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்
சென்றான் திகழும்சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்."

(சூளாமணி. காப்பு

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

**இரைக்குங் கணி கொண்ட மூவடிவோடிடங் கொங்கு மற்றும்...கழிநெடிலே**

**ஆசிரிய விருத்தம்**

5. "இரைக்கு மஞ்சிறைப் பறவைகள் எனப்பெயர்
இளவண்டு புடைசூழ
நுரைக்கள் என்னுமக் குழம்புகள் திகழ்ந்தெழ
நுடங்கிய விலையத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடல் திரையொடு
பொருதல தவியாதே." (சூளாமணி கல்யாணச் . 51

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

**ஆசிரிய விருத்தம்**

6. "கணிகொண் டலர்ந்த நறவேங்கை யொடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
அகிலாவி குஞ்சி கமழ
மணிக்குண் டலங்கள் இருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொல் துணிவே."

(சூளாமணி . அரசியல். 19



இஃது எழுசீர்க் கழி நெடிலடியான் வந்த செய்யுள்.

**ஆசிரிய விருத்தம்**

7. "மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலகு மூடியெழின் முளைவயிர நாற்றித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடைமி னிழற்
சுடரோயுன் அடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டால்
சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே."

(சூளாமணி . துறவு.64)

இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

**ஆசிரிய விருத்தம்**

8. "இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்த்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோள்
முடங்கு வாலுளை மடங்கல் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரை மடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே."

[பொருள் : இடக்கையில் கொடிய வில்லையும் வலக்கையில் அம்பையும் ஏந்தி வந்தது பகைவர் படை. அப்படையை ஒளி வீசுகின்ற சக்கரப்படையைக் கொண்டு விரட்டியடித்தாள். அவள் வளைந்த வாலையும் பிடரி மயிரையும் உடைய சிங்கத்தின் மேல் அமர்ந்து பகையரசனை அழித்தவள். முத்துமாலை அணிந்த மார்பினையும் அசைகின்ற நுண்ணிய இடையினையும் உடையவள். அவளே துர்க்கையாகிய பார்வதி. அழகியாகத் திகழும் வளங்கொண்ட அணிகலன் அணிந்த அப்பார்வதியின் மார்பில் சாய்ந்து மகிழ்பவன் சிவபெருமான். குளத்தில் மலர்ந்த தாமரை போன்ற அகன்ற அப்பெருமானின் திருவடிகளைத் தன் தலையில் சூடுபவர், தமக்குத் தொல்லை தரும் வெம்மையான துயரத்தை நீங்கி வாழலாம்.]

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

9. "கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு கோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
அங்க பூவ மாதி யாய வாதி நூலின்
நீதி போது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே."

(பொருள் : நீண்ட நெற்றிப் பட்டத்தினையும் சினம் கொண் கண்களையும் உடையவர் வேந்தர். அவர் பூந்தாதுக்கள் நிறைந் மலர்மாலைகளைத் தலையில் சூடிய மனைவியரோடு சேர்ந் அருகதேவனை வழிபடச் சென்றனர். வேதங்களால் புகழப்படு தலைவனே! என்று கூறி வணங்கினர். அங்கங்களுக்கு எல்லா அடிப்படையாய் விளங்குகின்ற தர்ம நூலின் முதற்பொருளா விளங்குபவன் அவ்அருகதேவன். அவனைக் காலையிலு மாலையிலும் மறவாமல் தொழுபவர் ஒளியுலகை சேர்ந்து முத் அடைவர்.)

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

மற்றும் என்பதனால் பதின்சீரின் மிக்கு வருவனவும் உ அவை யாப்பருங்கல விருத்தியுள் கண்டு கொள்க.

வேல்நெடுங்கண்ணி என்பதும் கரிக்கைக் கவான் மருப்பே முலைமாதர் என்பதும் மகடூஉ முன்னிலை. கழிநெடிலே என்பது; அவை எல்லாம் கழிநெடிலடியாம் எ-று.

விரிக்கு நெடிலடி என்று சிறப்பித்த அதனால் எண்சீரின் மிக் சீரான் வரும் அடிகள் சிறப்பில எனக் கொள்க. என்னை ?

"இரண்டு முதலா எட்(டு)ஈ றாகத்
திரண்ட சீரான் அடிமுடி வுடைய
இறந்து வரினும் அடிமுடி வுடைய
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே."

என்றார் காக்கைபாடினியார்.

(13)

## நான்கு பாக்களுக்கும் உரிய அடி

14. வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.



(வெள்ளைக்(கு) இரண்டுஅடி;[1] வஞ்சிக்குமூன்(று)அடி;[2] மூன்று அகவற்கு;[3]
எள்ளப் படாக்கலிக்கு ஈர்இரண்டு ஆகும் இழிபு;[4] உரைப்போர்
உள்ளக் கருத்தின் அளவே பெருமை;[5] ஒண்போதலைத்த
கள்ளக் கருநெடுங்கண் சுரிமென்குழல் காரிகையே!

**(இ-ள்)** ஒளிவீசுகின்ற தாமரை மலர்களை வருத்துவதோடு மனத்தைக் கொள்ளைக் கொள்ளும் கரிய நீண்ட கண்களையும் சுருண்ட மென்மையான கூந்தலையும் உடைய பெண்ணே! 1.வெண்பாவிற்கு இரண்டடியும் 2.வஞ்சிப்பாவிற்கு மூன்றடியும் 3.ஆசிரியப்பாவிற்கு மூன்றடியும் 4. நீக்கப்படாத தன்மை கொண்ட கலிப்பாவிற்கு நான்கடியும் சிற்றெல்லைகளாக அமையும் 5. நான்கு பாவிற்கும் பேரெல்லை பாடுவோரின் பொருள் முடிபைக் குறித்து அமைவதாகும். (எனவே பொருளுக்கேற்ப அளவு வரையறையின்றி எத்துணை அடியிலும் பாடலாம்.)]

இ-கை. அவ்வடி வரையறையான் வந்த நான்கு பாவிற்கும் சிறுமை பெருமை உணர்த்துதல் நுதலிற்று.

வெள்ளைக்கு இரண்டடி இழிபு என்பது; வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை எ-று. வஞ்சிக்கு மூன்றடி இழிபு என்பது; வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று.

மூன்று அகவற்கு இழிபு என்பது; ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று. எள்ளப்படாக் கலிக்கு ஈர்இரண்டாகும் இழிபு என்பது; கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை எ-று.

உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை என்பது; நான்கு பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பே வரையறை இல்லை எ-று.

ஒண்போதலைத்த..... காரிகையே என்பது; மகடூஉ முன்னிலை.

எள்ளப் படாக் கலிக்கு என்று சிறப்பித்த அதனால் துள்ளல் ஓசையில் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவு கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளல் ஓசையில் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலி விருத்தம் என்றும் தெரிந்து உணரப்படும் எனக் கொள்க.

வெள்ளைக்கு இரண்டாம் அகவற்கு மூன்று கலிக்கடி நான்கு எள்ளப்படா வஞ்சிப்பாவிற்கு மூன்றாம் இழிபு என்று பாக்களை முறையிற் கூறாது தலைதடுமாற்றமாகக் காரிகை சொல்ல வேண்டியது என்னையோ எனின், தலை தடுமாற்றம் தந்து புணர்ந்து உரைத்தல் என்பது தந்திர உத்தி ஆகலின். அன்றியும் மயேச்சுரர் முதலாகிய ஒருசார் ஆசிரியர்.

வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்றார் என்பதூஉம், ஆசிரியப்பா இரண்டடிச் சுரிதகமாய் வரப்பெறும் என்றார் என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க. என்னை ?

*"வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனும்*
*நுண்பா உணர்ந்தோர் நுவலும் காலை*
*இரண்டும் மூன்றும் நான்கும் இரண்டும்*
*திரண்ட அடியின் சிறுமைக் கெல்லை."*

என்று எடுத்து ஓதிய மயேச்சுரர் வஞ்சிச் சிறுமைக்குக் காட்டும் பாட்டு.

*"பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி*
*வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்*
*அதனால்,*
*அறிவன தடியிணை பரவிப்*
*பெறுகுவர் யாவரும் பிறவியில் நெறியே."*

(பொருள் :சோலையில் வளர்ந்தது அசோகமரம். அது எழில்கொண்ட குளிர்ச்சி பொருந்திய பூக்கள் மிகுந்த கிளைகளை உடையது. அதன்கிழ் இருக்கும் அருகதேவனின் புகழைப் பாடாதவர் வினையிலிருந்து மீளார். ஆகையால் பேரறிவினனாக விளங்கும் அவ்விறைவனின் திருவடிகளை வணங்கிப் பிறவாத நன்னெறியினை அடைய வேண்டும்.)

இதனை முச்சீரடி வஞ்சியாக அலகிட்டு இரண்டடி ஆமாறு கண்டு கொள்க. என்னை ?

*"ஒருதொடை ஈரடி வெண்பாச் சிறுமை*
*இருதொடை மூன்றாம் அடியின் இழிந்து*
*வருவன ஆசிரியம் இல்லென மொழிப*
*வஞ்சியும் அப்பா வழக்கின ஆகும் ."* (யாப்பருங்கல விருத்தி - மேற்)

*"நான்காம் அடியினும் மூன்றாம் தொடையினும்*
*தாழ்ந்து கலிப்பாத் தழுவுதல் இலவே."* (யாப்பருங்கல விருத்தி - மேற்)

*"உரைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை*
*வரைத்தித் துணையென வைத்துரை இல்லென்று*
*உரைத்தனர் மாதோ உணர்ந்திசி னோரே."* (யாப்பருங்கல விருத்தி - மேற்)

என்றார் காக்கைபாடினியார்.





**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

15. அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
திறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே .

**(அறத்தாறு இதுஎன வெள்ளைக்கு இழிபு;[1] அகவற்கு இழிபு**
**குறித்தாங்கு உரைப்பின் முதுக்குறைந்தாம்;[2] குறையாக் கலியின்**
**திறத்தாறு இது செல்வப்போர்;[3] செங்கண்மேதி வஞ்சிச் சிறுமை;[4]**
**புறத்தாழ் கருமென் குழல் திருவே அன்ன பூங்கொடியே!**

**(இ-ள்)** முதுகுப் புறத்தில் நீண்டு தொங்கும் கரிய மென்மையான கூந்தலை உடையவளே! திருமகளை ஒத்துக் காணப்படும் பூவினை உடைய கொடி போன்றவளே! *1.* அறத்தாறு எனத் தொடங்கும் பாடல் வெண்பாவின் சிற்றெல்லைக்கு உரியது *2.* அகவற் பாவிற்குரிய சிற்றெல்லையைக் காட்டுவது முதுக்குறைந்தனளே என்பதாம் *3.*குறைவு படாத கலிப்பாவின் சிற்றெல்லைக்குச் செல்வப்போர் எனத் தொடங்குவது எடுத்துக் காட்டாகும் *4.* செங்கண்மேதி எனத் தொடங்கும் பாடல் வஞ்சிப்பாவிற்குரிய சிற்றெல்லைக்கு எடுத்துக் காட்டாகும்.)

இ-கை. அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**அறத்தாறு இதுவென வெள்ளைக்கு இழிபு**

1. *"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை."* (திருக்குறள் - 37)

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

**அகவற்கு இழிபு குறித்தாங்கு உரைப்பின் முதுக்குறைந்தாம்**

2. *"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே*
*மலையன் ஒள்வேற் கண்ணி*
*முலையும் வாரா முதுக்குறைந் தனளே."*

(பொருள் ; மலையமானின் ஒளிவீசுகின்ற வேலை ஒத்த கண்களை உடையவள் தலைவி. அவளோ மார்பு தோன்றாத இளைய பருவத்தினள். ஆயினும் மிகுந்த அறிவுடையவளாகக் காணப்படுகிறாள்.)

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

[illegible]

3. "செல்வப்போர்க் கதக்கண்ணன் ...... ஒளித்ததே."

இது நான்கடியான் வந்த கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

செங்கண்மேதி வஞ்சிச் சிறுமை

4. "செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செறுவில்,
நல்வயல் ஊரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே."

[பொருள் : சிவந்த கண்களைக் கொண்ட எருமை வயல்களில் விளைந்த கரும்பினை மிதித்துத் துவைத்தது. அது அவ்வயல்களில் காணப்பட்ட குவளைமலர்களைத் தின்றது. பின்னர்ச் சோலையில் உள்ள காஞ்சிமர நிழலில் உறங்கியது. இத்தகு நீர்வளம் பொருந்திய நல்ல நன்செய் நிலங்கள் மிகுந்த ஊருக்குரியவன் தலைவன். அவன் புகழ்வதற்கு அமையாத பெரிய வள்ளல் தன்மை வாய்ந்தவன்.]

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

புறத்தாழ் கருமென் குழல்திருவே அன்ன பூங்கொடியே என்பது மகடூஉ முன்னிலை. ஆங்கு-அசை. [15]

## தொடை பற்றிய கருத்துக்கள்

ஒரு செய்யுளில் அமைந்த அடிகளும் அவ்வடிகளில் இடம்பெற்ற சீர்களும் ஒன்றோடொன்று பொருத்தமுறத் தொடுக்கப்படுவது தொடையாகும். தொடை என்பது காரணப் பெயராவதை அடியிரண்டு தொடுத்தல் முதலாயின தொடையே என்னும் கூற்று எடுத்துரைக்கிறது. மலர்களால் தொடுக்கப்படும் மாலையைப் போல அடிகளால் தொடுக்கப்படுவதால் தொடை என்பது உவமையால் அமைந்த பெயராகும். ஓரடிக்கும் மற்றோர் அடிக்கும் உள்ள பொருத்தத்தை விளக்குவது முதற்றொடை அல்லது தலைமைத் தொடையாகும். இவ்வாறன்றி ஓர் அடியின்கண் அமைந்த சீர்களில் காணும் பொருத்தத்தைத் தொடை விகற்பம் எனக் கூறுவர். இவ்விருவகைத் தொடைகளும் செய்யுளின் சிறப்பிற்கும் ஓசை நயத்திற்கும் அடிப்படையாய் விளங்குகின்றன. இக்கருத்துப் பற்றியே தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்னும் பழமொழியும் அமைந்துள்ளது.



### முதற்றொடை [8]

தொடைகள் 1. மோனை 2. எதுகை 3. இயைபு 4. முரண் 5. அளபெடை 6. அந்தாதி 7. இரட்டை 8. செந்தொடை என எட்டு வகைப்படும். அடி தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை. முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை. அடி தோறும் இறுதியெழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு. அடி தோறும் முதற்சீர் சொல்லாலோ பொருளாலோ மாறுபட்டு நிற்பது முரண் தொடையாகும். அடி தோறும் முதற்கண் அமைந்த எழுத்து அளபெடுத்து வருவது அளபெடை. ஓரடியின் ஈற்றில் நிற்கும் எழுத்தோ அசையோ சீரோ அடியோ அடுத்த அடிக்கு முதலாய் வருவது அந்தாதி. ஓர் அடியில் முதலில் வந்த சொல் அடி முழுதும் வருவது இரட்டை. மோனை முதலான தொடைகளின்றி அமைவது செந்தொடை.

### தொடை விகற்பம் [7]

ஓரடியின்கண் அமைந்த சீர்களின் பொருத்தத்தை எடுத்துரைப்பது தொடை விகற்பமாகும். இது சீர்களை வைத்து எடுத்துரைக்கப்படுவதால் சீர்வகைத் தொடை எனவும் குறிக்கப்படுகிறது. இத்தொடை விகற்பம் நான்கு சீர்களைக் கொண்ட அளவடிகளில் மட்டுமே பொருந்தி வருவதாகும். இது 1. இணை 2. பொழிப்பு 3. ஒரூஉ 4. கூழை 5. மேற்கதுவாய் 6. கீழ்க்கதுவாய் 7. முற்று என ஏழு வகைப்படும். அடி தோறும் முதற்சீரிலும் இரண்டாம் சீரிலும் மோனை முதலாயின பொருந்தி வருவது இணையாகும். ஒன்றிலும் மூன்றிலும் வருவது பொழிப்பு. ஒன்றிலும் நான்கிலும் அமைவது ஒரூஉ. ஈற்றுச்சீர் நீங்கலாக முதல் மூன்று சீரிலும் அமைவது கூழை. ஒன்று, மூன்று, நான்கு ஆகிய சீர்களில் அமைவது மேற்கதுவாய். ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய சீர்களில் அமைவது கீழ்க்கதுவாய். நான்கு சீர்களிலும் அமைவது முற்று.

இவ்வேழ் தொடை விகற்பங்களுடன் எதுகை முதலான ஐந்தையும் பெருக்க உண்டாகும் தொடைகள் முப்பத்தைந்து. அவற்றுடன் முதற்றொடைகள் எட்டையும் கூட்டத் தொடைகள் 43 ஆகும். தொடை பற்றிய கருத்துக்கள் மூன்று காரிகைகளில் (16, 17, 19) எடுத்துரைக்கப்படுகின்றன.

### தொடையும் அவற்றின் பெயர்களும்

16. எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடிதோறு மொழிமுதற்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

(எழுவாய் எழுத்து ஒன்றின் மோனை;[1] இறுதி இயைபு;[2] இரண்டாம்
வழுவா எழுத்துஒன்றின் மாதே! எதுகை;[3] மறுதலைத்த
மொழியான் வரினும் முரண்;[4] அடிதோறும் மொழிமுதற்கண்
அழியாது அளபெடுத்து ஒன்றுவது ஆகும் அளபெடையே.[5]

(இ-ள்) பெண்ணே! 1. அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை 2. அடியின் ஈற்றெழுத்துப் பொருந்தி வரத் தொடுப்பது இயைபாகும் 3. அளவொத்த முதலெழுத்து நிற்க இரண்டாம் எழுத்துப் பொருந்தி வருவது எதுகையாகும் 4.மாறுபட்ட மொழியால் வருவது முரணாகும் 5. அடிதோறும் மொழி முதலில் அளபெடுத்துத் தம்முள் ஒன்றி வருவது அளபெடைத் தொடையாகும்.)

| | | |
|---|---|---|
| 1. | அடி மோனை | கூழை மோனை |
| | இணைமோனை | மேற்கதுவாய் மோனை |
| | பொழிப்பு மோனை | கீழ்க்கதுவாய் மோனை |
| | ஒரூஉ மோனை | முற்றுமோனை - எனவும், |
| 2. | அடி இயைபு | கூழை இயைபு |
| | இணை இயைபு | மேற்கதுவாய் இயைபு |
| | பொழிப்பு இயைபு | கீழ்க்கதுவாய் இயைபு |
| | ஒரூஉ இயைபு | முற்று இயைபு - எனவும், |
| 3. | அடி எதுகை | கூழை எதுகை |
| | இணை எதுகை | மேற்கதுவாய் எதுகை |
| | பொழிப்பு எதுகை | கீழ்க்கதுவாய் எதுகை |
| | ஒரூஉ எதுகை | முற்று எதுகை - எனவும், |
| 4. | அடி முரண் | கூழை முரண் |
| | இணை முரண் | மேற்கதுவாய் முரண் |
| | பொழிப்பு முரண் | கீழ்க்கதுவாய் முரண் |
| | ஒரூஉ முரண் | முற்றுமுரண் - எனவும், |
| 5. | அடி அளபெடை | கூழை அளபெடை |
| | இணை அளபெடை | மேற்கதுவாய் அளபெடை |
| | பொழிப்பு அளபெடை | கீழ்க்கதுவாய் அளபெடை |
| | ஒரூஉ அளபெடை | முற்று அளபெடை - எனவும், |

மோனைத் தொடை, இயைபுத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை, அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்னும் தொடையும், தொடை விகற்பமும் ஆமாறு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.



அவற்றுள், இக்காரிகை அடிமோனையும், அடி இயைபும், அடி எதுகையும், அடி முரணும், அடி அளபெடையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

எழுவாய் எழுத்து ஒன்றின் மோனை என்பது; அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும் எ-று.

எழுவாய் எனினும் ஆதி எனினும் முதல் எனினும் ஒக்கும். மோனை எனினும் முதல் தொடை எனினும் ஒக்கும்.

இறுதி இயைபு என்பது; அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத் தொடை எனப்படும் எ-று.

இரண்டாம் வழுவா எழுத்து ஒன்றின் எதுகை என்பது; அடிதோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடி எதுகைத் தொடை எனப்படும் எ-று.

மாதே என்பது மகடூஉ முன்னிலை. இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகை என்னாது வழுவாவெழுத்து என்று மிகுத்துச் சொல்லிய அதனால், இரண்டாம் எழுத்து ஒன்றி வரினும் முதலெழுத்து எல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து கட்டு என்பதற்குப் பட்டு என்பதல்லது பாட்டு என்பது எதுகை ஆகாது; காட்டு என்பதற்குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது எனக் கொள்க.

மறுதலைத்த மொழியான் வரினும்முரண் என்பது; அடிதோறும் முதற்கண் சொல்லானும், பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும் எ-று. மொழியான் வரினும் என்ற உம்மையால் பொருளான்வரினும் என்பதாயிற்று. அடிதோறும் என்பது; மத்திம தீபம் எனக் கொள்க.

முதன்மொழிக்கண் அழியாது அளபெடுத்து ஒன்றுவதாகும் அளபெடையே என்பது; அடிதோறும் முதற்கண் உயிரானும், ஒற்றானும் அளபெடுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடி அளபெடைத் தொடை எனப்படும் எ-று.

அழியாது என்று மிகுத்துச் சொல்லிய அதனால் நான்கு உயிரளபெடையும், இரண்டு ஒற்றளபெடையும் தம்முள் ஒன்றி வரத் தொடுப்பது சிறப்புடைத்து. தொடை விகற்பத்துள் நான்கு உயிரளபெடையும், இரண்டு ஒற்றளபெடையும் தம்முள் மறுதலைப் படத் தொடுப்பினும் இழுக்காது எனக் கொள்க. என்னை ?

"முதலெழுத் தொன்றின் மோனை எதுகை
முதலெழுத் தளவோடு ஒத்தது முதலா
அஃதொழித் தொன்றின் ஆகும் என்ப
இவ்விரு தொடைக்கும் கிளையெழுத்து உரிய."

என்றார் பல்காயனார்.

"இறுவாய் ஒப்பின்அஃது இயைபென மொழிப."

என்றார் கையனார்.

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே." (தொல் .1353)

என்றார் தொல்காப்பியனார்.

"அளபெடைத் தொடைக்கே அளபெடை ஒன்றும்."

என்றார் நத்தத்தனார். (1G)

### அந்தாதி, இரட்டை, செந்தொடைகள்

17. அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே.

(அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி;[6] அடிமுழுதும்
வந்த மொழியே வருவது இரட்டை[7] வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால்
செந்தொடை நாமம் பெறும்;[8] நறுமென்குழல் தேமொழியே!

(இ-ள்) நறுமணம் கமழும் மென்மையான கூந்தலையும் தேன்போன்ற இனிய மொழியினையும் உடைய பெண்ணே!6. ஓரடியின் இறுதி அடுத்த அடிக்கு முதலாகி வருவது அந்தாதித் தொடையாகும் 7. ஓரடியின் முதலில் வந்த சொல் அடி முழுவதும் வரத் தொடுப்பது இரட்டைத் தொடையாகும் 8. மோனை முதலாகிய தொடையின்றி மாறுபட அமைவது செந்தொடை எனப்பெயர் பெறும்.)

இ-கை. அந்தாதித்தொடையும், இரட்டைத்தொடையும், செந்தொடையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி என்பது; அடிதோறும் இறுதிக் கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும் எ-று.



அடிமுழுதும் வந்த மொழியே வருவது இரட்டை வரன்முறையான் என்பது; ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத் தொடை எனப்படும் எ-று. வரன் முறையான் என்று மிகுத்துச் சொல்லிய அதனால், ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக் கொள்க.

முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை நாமம் பெறும் என்பது; மேற்சொல்லப் பட்ட மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும் எ-று.

முந்திய மோனை என்று சிறப்பித்த அதனால் அசையும், சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்து எனக் கொள்க.

நறுமென் குழல் தேமொழியே என்பது; மகடூஉ முன்னிலை.என்னை?

"அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியின்அஃது
அந்தாதித் தொடைஎன்று அறைதல் வேண்டும்."

என்றார் நத்தத்தனார்.

"ஒருசீர் அடிமுழுவதும் வருவது இரட்டை."

என்றார் மயேச்சுரர்.

"சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலின்
சொல்லியற் புலவரது செந்தொடை என்பர்." (தொல். 1367)

என்றார் தொல்காப்பியனார்.

"அசையினும் சீரினும் இசையினும் எல்லாம்
இசையா தாவது செந்தொடை தானே." (யாப்பருங்கலம் விருத்தி. மேற்.50)

(17)

### உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

18. மாவும்புண் மோனை யியையின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
ஓவிலந் தாதி யுலகுட னாமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.

(மாவும்புள் மோனை;[1] இயைபு இன்னகை;[2] வடியேர் எதுகைக்கு;[3]
ஏவின் முரணும் இருள்பரந்து;[4] ஈண்டு அளபு ஆஅஅளிய ;[5]
ஓவில் அந்தாதி உலகுடனாம்;[6] ஒக்குமே இரட்டை ;[7]
பாவரும் செந்தொடை பூத்தஎன்று ஆகும்;[8] பணிமொழியே!

[இ-ள்] பணிந்த மொழியைப் பேசுகின்ற பெண்ணே! 1. மாவும் புள்ளும் எனத் தொடங்கும் பாடல் மோனைத் தொடைக்கு எடுத்துக்காட்டாகும் 2. இயைபிற்கு உரியது இன்னகை எனத் தொடங்கும் பாடலாகும் 3. வடியேர் என்பது எதுகைக்குரிய பாடலாகும் 4. சொல்லாலும் பொருளாலும் அமைந்த முரணுக்கு இருள்பரந்து என்னும் பாடல் உரியதாகும் 5. இவ்விடத்து அளபெடைக்கு ஆஅஅளிய என்னும் பாடலாகும் 6. ஒழிதலின்றி எல்லா வகையான அந்தாதிக்கும் உலகுடன் என்பது எடுத்துக்காட்டுப் பாடலாகும் 7. ஒக்குமே எனத் தொடங்கும் பாடல் இரட்டைத் தொடைக்கு மேற்கோளாகும் 8. பரந்துபட்டு வருகின்ற செந்தொடைக்குப் பூத்த எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாம்.]

இ-கை. அடிமோனை முதலாகிய முதற்தொடை எட்டினாலும் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**மாவும் புள் மோனை**

**ஆசிரியப்பா**

1. “ ***மா**வும் புள்ளும் வதிவயின் படர*
*__மா__நீர் விரிந்த பூவும் கூம்ப*
*__மா__லை தொடுத்த கோதையும் கமழ*
*__மா__லை வந்த வாடை*
*__மா__யோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.*”

[பொருள்: காலையில் இரை தேடிச் சென்ற விலங்குகளும் பறவைகளும் வழியைப் பின்பற்றித் தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பின. பெரிய நீர்நிலைகளில் மலர்ந்திருந்த பூக்கள் குவிந்தன. மாலையாகத் தொடுக்கப்பட்ட முல்லை மலர்கள் மணத்தைப் பரப்பின. அம்மாலை நேரத்தில் வாடைக்காற்றும் வீசியது. இந்நான்கும் மாமை நிறம் கொண்டு தனித்திருந்த தலைவியின் உயிரை உடலிலிருந்து பிரித்துத் தலைவனின் வருகையை எதிர்நோக்கி வெளியே நிற்கச் செய்தன.]

இஃது அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத் தொடை எ-று.

**இயைபு இன்னகை**

**ஆசிரியப்பா**

2. “*இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் __அணங்கே__*
*நன்மா மேனிச் சுணங்குமார் __அணங்கே__*
*ஆடமைத் தோளி ஊடலும் __அணங்கே__*
*அரிமதர் மழைக்கணும் __அணங்கே__*
*திருநுதல் பொறித்த திலகமும் __அணங்கே.__*”



[பொருள் : இனிய முறுவலைத் தோற்றுவிக்கும் தலைவியின் சிவந்த வாயிலிருந்து பிறக்கின்ற சொற்கள் எனக்குத் துன்பத்தைத் தருகின்றன நன்னிறம் பொருந்திய மேனியில் படர்ந்த தேமலும் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடையாள் என்னோடு கொண்ட சிறு பிணக்கும் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. செவ்வரி படர்ந்து மதர்த்துத் திரியும் குளிர்ந்த கண்ணும் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. அழகு பொருந்திய நெற்றியில் இட்ட பொட்டும் எனக்கு வருத்தத்தைத் தருகிறது.]

இஃது அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுத்தமையான் அடிஇயைபுத் தொடை எ-று.

**வடியேர் எதுகைக்கு**

**வெண்பா**

3. “*வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கண் சென்றார்*
*கடியார் கனங்குழாய்! காணார்கொல் காட்டுள்*
*இடியின் முழக்குஅஞ்சி ஈர்ங்கவுள் வேழம்*
*பிடியின் புறத்தசைத்த கை.*”

[பொருள் : புதுமைமிக்க செறிந்த குழையை அணிந்தவளே! மாவடுவைப் பிளந்தாற் போன்ற கண்களிலிருந்து நீர்பெருகப் பெரிய பொருளுக்காகத் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார். அவர் கடந்து செல்லும் காட்டினுள் கார்கால இடியின் ஓசையைக் கேட்டுப் பெரிய கன்னத்தை உடைய ஆண்யானை பெண்யானையின் முதுகைத் தடவிக்கொடுத்து அஞ்சாதபடி செய்யும். அக்காட்சியைத் தலைவர் கண்டாரோ? இல்லையோ? கூறுவாயாக! (அப்படிக் கண்டிருந்தால் தலைவியின் நினைவால் மேலும் செல்லாமல் திரும்பி வந்திருப்பார் என்பது கருத்து.)]

இஃது அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுத்தமையான் அடிஎதுகைத் தொடை எ-று.

**ஏவின் முரணும் இருள் பரந்து**

**ஆசிரியப்பா**

4. “***இருள்**பரந் தன்ன மாநீர் மருங்கில்*
***__நிலவு__**குவித் தன்ன வெண்மணல் ஒருசிறை*
***__இரும்பின்__** அன்ன கருங்கோட்டுப் புன்னை*
***__பொன்னின்__** அன்ன நுண்தா(து) இறைக்கும்*
***__சிறு__**குடிப் பரதவர் மடமகள்*
***__பெருமதர்__** மழைக்கணும் உடையவால் அணங்கே.*”

[பொருள் : இருளானது பரந்து கிடப்பதைப் போன்று கரிய கடல் காணப்பட்டது. அதனை அடுத்து நிலவொளியை ஒருசேர வைத்தாற் போன்று வெண்மையான மணல் பரவிக் கிடந்தது. அதன் ஒரு பக்கத்தில் இரும்பினைப் போன்று கரிய நிறமுள்ள கிளைகளை உடைய புன்னைமரம் இருந்தது. அது பொன்னைப் போன்ற நுண்மையான பூந்தாதுக்களை உதிர்த்தது. அங்கு அமைந்த சிறிய பரதவர் குடும்பத்தில் பிறந்தவள் ஓர் இளம்பெண்ணாகிய தலைவி. அவளுடைய குளிர்ச்சி பொருந்திய களிப்புற்ற பெரிய கண்கள் என்னை வருத்தி நோய் செய்தன.]

இஃது அடிதோறும் முதற்கண்ணே எல்லாம் மறுதலைப் படத் தொடுத்தமையான் அடிமுரண் தொடை எ-று. ஏவின் முரணும் என்பது; எல்லா முரண்தொடையாலும் வரப்பெறும் எ-று.

**ஈண்டளபு ஆஅ அளிய**

**பஃறொடை வெண்பா**

5. "***ஆஅ*** *அளிய அலவன்தன் பார்ப்பினோ(டு)*
***ஈஇர்*** *இரைமுக்கொண் ஈர்அலைப் பள்ளியுள்*
***தூஉந்*** *திரையலைப்பத் துஞ்சா(து) இறைவன்தோள்*
***நோஒ*** *வலைப்பட்ட நம்போல் நறுநுதால்*
***ஓஒ*** *உறக்குந் துயர்.*"

[பொருள் : தலைவியே! தன் குஞ்சுகளோடு நுண்ணிய உணவினை உண்டு இடைவிடாது அலைகள் தாவும் நீரால் ஈரம் மாறாத சேற்று வலைக்குள் அகப்பட்டுத் துன்பமுற்றது ஒரு நண்டு. அது பிரிந்து சென்ற தலைவனுடைய அன்பாகிய வலையில் அகப்பட்டு நாம் உறங்காமல் தவிப்பதைப் போல மிகவும் துன்பமுறுகிறது. ஆதலால் நண்டும் அதன் குஞ்சுகளும் மிகவும் இரக்கத்தோடு அன்பு பாராட்டுதற்கு உரியனவாம்.]

இஃது அடிதோறும் முதற்கண்ணே அளபெடுத்து ஒன்றி வரத் தொடுத்தமையான் அடிஅளபெடைத் தொடை எ-று.

**ஒவ்வில் அந்தாதி உலகுடனாம்**

**ஆசிரியப்பா**

6. "*உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி* (அசை அந்தாதி)
*மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை* (சீர் அந்தாதி)
*முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்*
*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன் அவ்*
*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை*
*அறிவுசேர் உள்ளமோ(டு) அருந்தவம் புரிந்து* (அடி அந்தாதி)
*துன்னிய மாந்தரது என்ப* (எழுத்தந்தாதி)
*பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே.*"



[பொருள் : இவ்வுலகில் பரவியுள்ள இருளைப் போக்கிப் பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது ஒளியை உடைய சந்திரன். அவ்வொப்பற்ற சந்திரனின் ஒளியைத் தோற்றோடும்படிச் செய்யும் மிகுந்த ஒளியை உடையது மூன்றுகுடை. அவற்றின் நிழலின்கீழ்ப் பொன்னால் செய்யப்பட்ட இருக்கை. அவ்விருக்கையில் இருப்பவன் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியதால் ஒளிரும் அறிவை உடைய அருகதேவன். அவ்விருக்கையில் இனிதே வீற்றிருக்கும் அவ்வருகதேவனை அறிவு பொருந்திய உள்ளத்தில் நிலைபெறச் செய்து அரிய தவத்தினை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தவர் சொல்லுதற்கு அருமைப்பாடு வாய்ந்த மேல் உலகத்தைப் பொருந்திய மாந்தர் என்று எல்லோராலும் சிறப்பிக்கப் பெறுவர். (இப்பாடல் உலகெனத் தொடங்கி உலகென முடிந்ததால் மண்டல அந்தாதி எனச் சிறப்பிக்கப் பெறுகிறது.)]

இது நான்கந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

ஒவ்விலந்தாதி என்றதனால் எல்லா அந்தாதியும் வரப்பெறும் என்று கொள்க.

**ஒக்குமே இரட்டை**

**சிந்தியல் வெண்பா**

7. "*ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்*
*விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்*
*குளக்கொட்டிப் பூவின் நிறம்.*"

[பொருள் : ஒத்திருக்கும் ஒத்திருக்கும் ஒத்திருக்கும் ஒத்திருக்கும்; சிறிதாக எரிகின்ற விளக்கின் சுடரை அப்படியே ஒத்திருக்கும் ஒத்திருக்கும். குளத்தின்கண் பூத்திருக்கும் கொட்டிப் பூவின் நிறம்.]

இஃது ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத் தொடை எ-று. இஃது இறுதிச்சீர் ஏகாரத்தால் குறைபடினும் இழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக் கொள்க.

**பாவரும் செந்தொடை பூத்த என்றாகும்**

**ஆசிரியப்பா**

8. "*பூத்த வேங்கை வியன்சினை ஏறி*
*மயிலினம் அகவும் நாடன்*
*நன்னுதல் கொடிச்சி மனத்தகத் தோனே.*"

[பொருள் : பூவுடன் கூடிய அகன்ற கிளையை உடையது வேங்கை மரம். அதில் ஏறி மயில்கள் கூட்டமாக அகவும். அத்தகு குறிஞ்சி நிலத்திற்கு

உரிய தலைவனை குறிஞ்சி நிலப் பெண்ணாகிய கொடிச்சியின் மனத்தில் நீங்காமல் நிலைபெற்றிருப்பவன்.]

இது மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுத்தமையால் செந்தொடை. பாவரும் என்பதனை இறுதி விளக்காகக் கொண்டு பொருளுரைத்துக் கொள்க.

பணிமொழியே என்பது: மகடூஉ முன்னிலை. **[18]**

## தொடை விகற்பம்

18. இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉ வாம்
இருசீ ரிடையிட் டீற்றிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றாமென்ப மற்றவையே.

[இருசீர் மிசைஇணை ஆகும்;[1] பொழிப்பு இடையிட்டு;[2] ஒரூஉவாம் இருசீர் இடையிட்டது;[3] ஈறிலி கூழை ;[4] முதல் இறுவாய் வரும்சீர் அயல்இல மேல்;[5] கீழ்;[6] வகுத்த மைதீர்கதுவாய் வரும்சீர் முழுவதும் ஒன்றின் முற்றாம்;[7] என்ப மற்றவையே.

[இ-ள்] 1.ஒரு பாடலில் அமைந்த ஓர் அடியின் நான்கு சீர்களுள் முதலிரு சீர்களில் மோனை முதலான ஐந்தும் அமைந்திருப்பது இணை 2.ஒன்று இடைவிட்டு முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் அமைந்திருப்பது பொழிப்பு 3. இருசீர் விட்டு முதற் சீரிலும் நான்காம் சீரிலும் அமைவது ஒரூஉ 4. ஈற்றுச்சீர் ஒழிய எஞ்சிய மூன்று சீர்களிலும் அமைவது கூழை 5. இரண்டாம் சீர் நீங்கலாக எஞ்சிய மூன்று சீர்களில் அமைவது மேற்கதுவாய் 6. மூன்றாம் சீர் நீங்கலாக எஞ்சிய மூன்று சீர்களில் அமைவது கீழ்க்கதுவாய் 7. நான்கு சீர்களிலும் அமைவது முற்று ஆகும்.]

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இருசீர் மிசைஇணை ஆகும் என்பது; முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கூழை எனப்படும் எ-று.

பொழிப்பு இடையிட்டு என்பது; முதற்சீர்க் கண்ணும் மூன்றாம் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்பு எனப்படும் எ-று.

ஒரூஉவாம் இருசீர் இடையிட்டது என்பது; நடுஇரு சீர்க்கண்ணும் இன்றி முதற்சீர்க் கண்ணும் இறுதிச்சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது ஒரூஉ எனப்படும் எ-று.



ஈறிலி கூழை என்பது : இறுதிச்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது கூழை எனப்படும் எ-று.

முதல் இறுவாய், வருசீர் அயலில மேல்கீழ் வகுத்த மைதீர்கதுவாய் என்பது ;முதல் அயற்சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய் என்றும், ஈற்றயற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் சொல்லப்படும் எ-று. இது நிரனிறை எனக் கொள்க. என்னை ?

"*கடையயல் முதலயல் கதுவாய் கீழ்மேல்*"

என்றார் அவிநயனார்.

முதல்அயற்சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாய் என்றும் ஈற்றயல் சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாய் என்றும் வேண்டினார் கையடனார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் என்பது அறிவித்தற்கு மைதீர் கதுவாய் என்று விதப்புரைத்தார் எனக் கொள்க.

வரும்சீர் முழுவதும் ஒன்றின் முற்றாம் என்ப என்பது; எல்லாச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது முற்று எனப்படும் எ-று.

மற்றவையே என்பது; இணைமோனை முதலிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் எ-று. இஃது இறுதி விளக்கு எனக்கொள்க.

சீர்முழுதும் ஒன்றின் முற்றாம் என்னாது வருசீர் என்று சிறப்பித்தது இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் அளவடிக்கண்ணே வழங்கப்படும் என்பதூஉம், இணை இயைபு முதலாகிய ஏழுவிகற்பமும் இறுதிச் சீரே முதற்சீராகக் கொண்டு வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க. என்னை ?

"*இருசீர் மிசைவரத் தொடுப்பது இணையே.*" (யாப்பருங்கலம் - 42)

"*முதலொடு மூன்றாம் சீர்த்தொடை பொழிப்பே.*" (யாப்பருங்கலம் - 43)

"*சீரிரண்டு இடைவிடத் தொடுப்பது ஒரூஉத்தொடை.*" (யாப்பருங்கலம் - 41)

"*மூவொரு சீரும் முதல்வரத் தொடுப்பது*
*கூழை என்மனார் குறியுணர்ந் தோரே.*" (யாப்பருங்கலம் - 45)

"*முதலயற் சீரொழித்து அல்லன மூன்றின்*
*மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே.*" (யாப்பருங்கலம் - 46)

"ஈற்றயல் சீரொழித்து எல்லாம் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமையது ஆகும்." (யாப்பருங்கலம் - 47)

"சீர்தொறும் தொடுப்பது முற்றெனப் படுமே." (யாப்பருங்கலம் - 48)

என்றார் ஆகலின். **[19]**

### உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

20. மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னாமியையிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன இனிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப தாழ்குழலே.

[மோனை விகற்பம் அணிமலர்;[1] மொய்த்துடனாம் இயைபிற்கு;[2]
ஏனை எதுகைக்கு இனம்பொன்னின் அன்ன;[3] இனிமுரணிற்கு
ஆன விகற்பமும் சீறடிப் பேரது;[4] அளபெடையின்
தான விகற்பமும் தாஅள் தாஅமரை;[5] என்ப தாழ்குழலே!

**[இ-ள்]** நீண்டு தொங்கும் கூந்தலை உடைய பெண்ணே! 1. சீர் மோனைக்கு அணிமலர் எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாகும் 2. மொய்த்துடன் என்பது சீர் இயைபிற்குரிய பாடலாகும் 3. மற்ற எதுகை விகற்பத்திற்கு இனமாவது பொன்னின் அன்ன எனத் தொடங்கும் பாடலாகும் 4. இனி முரண் விகற்பத் தொடைக்குச் சீறடிப்பேர் என்பதாகும் 5. அளபெடையின் விகற்பத்திற்கு தாஅள் தாமரை எனத் தொடங்கும் பாடல் உரியதாகும்.]

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களால் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**மோனை விகற்பம் அணிமலர்**

**ஆசிரியப்பா**

1. *"அணிமலர் அசோகின் தளிர்நலம் கவற்றி* (இணைமோனை)
*அரிகுரல் கிண்கிணி அரற்றும் சீறடி* (பொழிப்பு)
*அம்பொன் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி* (ஒரூஉ)
*அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்* (கூழை)
*அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்* (மேற்கது)
*அவிர்மதி அனைய திருநுதல் அரிவை* (கீழ்க்கது)
*அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த* (முற்று)
*கருங்கயல் நெடுங்கண் நோக்கம்என்*
*திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே."*



[பொருள்: அழகிய மலர்கள் பூத்த அசோக மரத்தின் இளந்தளிரின் அழகினைத் தோற்றோடச் செய்ததும் தவளையைப் போல் ஒலி செய்கின்ற கிண்கிணி என்னும் அணியினை அணிந்ததும் ஆகிய சிறியஅடி; அழகிய பொன்னால் செய்யப்பெற்ற கலசத்தை உடைய அகன்ற தேரினைத் தோற்றோடச் செய்யும் அல்குல் தடம்; அழகிய நுண்ணிய இடை; தோன்றுகின்ற மார்பு; அழகிய வளையல் அணிந்த மூங்கில் போன்ற தோள்; ஒளிவீசுகின்ற எட்டாம் நாள் பிறையை ஒத்த நெற்றி; கயல் போல் பிறழ்கின்ற நீண்ட கண் ஆகியவற்றை உடையவள் ஒருத்தி. அப்பெண்ணின் கூர்மையான வேல் போன்ற பார்வை சிறந்திருந்த என் அறிவை வென்று கலக்கமடையச் செய்தது.]

இதனுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

**மொய்த்துடனாம் இயைபிற்கு**

**ஆசிரியப்பா**

2. *"மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே* (இணை இயைபு)
*மற்றதன் அயலே முத்துறழ் மணலே* (பொழிப்பு)
*நிழலே இனியதன் அயலது கடலே* (ஒரூஉ)
*மாதர் நகிலே வல்லே இயலே* (கூழை)
*வில்லே நுதலே வேற்கண் கயலே* (மேற்கது)
*பல்லே தளவம் பாலே சொல்லே* (கீழ்க்கது)
*புயலே குழலே மயிலே இயலே* (முற்று)
அதனால்,
*இவ்வயின் இவ்வுரு இயங்கலின்*
*எவ்வயி னோரும் இழப்பர்தம் நிறையே."*

[பொருள்: அடர்ந்த மேகக்கூட்டம் உலவுகின்ற ஒரு சோலை. அதற்குப் பக்கத்தில் முத்தினைப் போன்று ஒளிவிடும் வெண்மணல். அதில் இனிய மரநிழல் காணப்பட்டது. அதனை அடுத்துக் கடல் பரந்து விரிந்திருந்தது. அங்கு உலவிய பெண்ணின் மார்போ சூதாடு கருவியின் வடிவை ஒத்திருந்தது. அவளுடைய நெற்றியோ வில்லை ஒத்திருந்தது. வேல் போன்ற கண்ணோ பிறழ்தலில் மீனைப் போன்று காணப்பட்டது. பல்லோ முல்லை அரும்பை ஒத்திருந்தது. சொல்லோ பால் போன்று இனிமை உடையதாய் இருந்தது. கூந்தலோ கார்முகிலைக் காட்டியது. நடையோ மயில் போன்றிருந்தது. இத்தன்மை கொண்டு ஓர் உருவம் இவ்விடத்தில் இங்கும் அங்குமாக உலவியது. அதனைக் கண்டால் எத்தன்மை வாய்ந்தோரும் தம் உறுதிப்பாட்டை இழந்து வருந்துவர்.]

இதனுள் இணை இயைபு முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

**ஏனை எதுகைக்கு இனம் பொன்னின் அன்ன**

**ஆசிரியப்பா**

3. "பொன்னின் அன்ன பொறிசுணங்கு ஏந்திப் (இணை எதுகை)
பன்னரும் கோங்கின் நன்னலம் கவற்றி (பொழிப்பு)
மின்னவிர் ஒளிவடம் தாங்கி மன்னிய (ஒரூஉ)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி (கூழை)
என்னையும் இடுக்கண் துன்னுவித்து இன்னடை (மேற்கது)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க் (கீழ்க்கது)
கன்னியம் புன்னை இன்னிழல் துன்னிய (முற்று)
மயிலேர் சாயல்அவ் வாள்நுதல்
அயில்வேல் உண்கண்எம் அறிவுதொலைத் தனவே."

(பொருள்: பொன்னின் நிறத்தை ஒத்த தேமலைப் பெற்றிருந்தாள். சொல்லுதற்கு அருமைப்பாடு வாய்ந்த முள் இலவமரத்தின் பூக்களை வருத்தும் சிவந்த இதழ்களைக் கொண்டிருந்தாள். மின்னலைப் போன்று ஒளிவிடுகின்ற முத்துமாலையை அணிந்திருந்தாள். நிலைபெற்ற அம்மாலையை அணிந்த நல்ல நிறத்தை உடைய மென்மையான பருத்த மார்பு மின்னலைப் போன்ற நுண்ணிய இடையை வருத்தமடையச் செய்தது. அத்துடன் எனக்கும் பெரிய துன்பத்தைத் தந்தது. இனிய நடையினை உடைய மென்மையான அன்னத்தைப் போலப் பல மலர்கள் பூத்துக் குலுங்கும் இளைய புன்னை மரத்தின் கீழ்த் தங்கினாள். மயிலொத்த சாயலையும் ஒளிவீசும் நெற்றியையும் உடைய அப்பெண்ணின் கூர்மையான வேலினைப் போலும் மையுண்ட கண்கள் எம் அறிவைக் கெட்டோடச் செய்தன.)

இதனுள் இணைஎதுகை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

**4. இனி முரணிற்கான விகற்பமும் சீறடிப்பேரது**

**ஆசிரியப்பா**

"சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு (இணை முரண்)
சுருங்கிய நுசுப்பின் பெருகுவடம் தாங்கிக் (பொழிப்பு)
குவிந்துசுணங்கு அரும்பிய கொங்கை விரிந்து (ஒரூஉ)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் (கூழை)
வெள்வளைத் தோளும் சேயரிக் கருங்கணும் (மேற்கது)
இருக்கையும் நிலையும் ஏந்தெழில் இயக்கமும் (கீழ்க்கது)



துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்துஎனை முனியாது (முற்று)
என்றும் இன்னணம் ஆகுமதி
பொன்திகழ் நெடுவேல் போர்வல் லோயே."

(பொருள்: பொன்போல ஒளிவீசும் நீண்ட வேலால் போர்செய்யும் ஆற்றல் வாய்ந்த தலைவனே! சிறிய அடியும் பெரிய அகன்ற அடிவயிறாகிய அரையும் வருந்தின. ஒடுங்கிக் காணப்பட்ட இடையோ பெரிய முத்துமாலையைத் தாங்கியது. நுனிப்பகுதி குவிந்து தேமல் படர்ந்ததாய்த் தோன்றிய மார்பின் அடிப்பகுதி விரிந்திருந்தது. சிறியதும் பெரியதும் நடுவானதும் ஆகிய மும்மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்திருந்தாள். வெண்மையான வளையலை அணிந்த தோளையும் சிவந்த கோடுகளை உடைய கரிய நிறங்கொண்ட கண்ணையும் கொண்டிருந்தாள். அமர்ந்திருத்தல், நிற்றல் ஆகியவற்றுடன் மிக்க எழிலுடன் அங்குமிங்குமாக நடந்தாள். பவளம் போன்ற வாயில் இனிமையான சொற்களைக் கூறி விருப்பமுடன் வெறுக்காமல் இன்று போல் என்றும் தலைவியைக் காப்பாற்றுவாயாக!)

இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

**அளபெடையின் தான விகற்பமும் தாள்தா அமரை என்ப**

**ஆசிரியப்பா**

5. "தாஅட் டாஅ மரைமலர் உழக்கிப் (இணைஅளபெடை)
பூஉக் குவளைப் போஒ தருந்திக் (பொழிப்பு)
காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய் (ஒரூஉ)
மாஅத் தாஅண் மோஒட்டு எருமை (கூழை)
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல் (மேற்கது)
மீஇ னாஅர்ந் துகளும் சீஇர் (கீழ்க்கது)
ஆஅ னாஅ நீஇள் நீஇர் (முற்று)
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக்கு அலரா னாவே."

(பொருள்: பெரிய வயிற்றினை உடைய ஓர் எருமை தண்டினை உடைய தாமரை மலர்களைக் காலால் துவைத்து மிதித்தது. பொலிவுடைய குவளையின் மொட்டுக்களை விரும்பித் தின்றது. காய்த்த செந்நெல்லை வெறுத்தது. தேன் போன்று இனிமையுடைய குளத்து நீரில் பாலைச் சொரிந்தது. அதனை அருந்திய மீன்கள் களிப்புற்றுத் துள்ளிப் பாய்ந்தன. அத்தகு அழகு பொருந்திய நீண்ட

நீர்நிலைகளை உடையவன் மருதநிலத் தலைவன். அவன் பிறரோடு கொண்ட உறவானது ஆராய்ந்து செய்யப்பட்ட வளையல்கள் அணிந்த தோளினை உடைய தலைவிக்குப் பழிச்சொல்லாயின.)

இதனுள், இணைஅளபெடை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

தானவிகற்பம் என்று சிறப்பித்த அதனால் இரண்டு அளபெடையும் வரப்பெறும் எனக் கொள்க.

தாழ்குழலே என்பது; மகடூஉ முன்னிலை. **(20)**

**உறுப்பியல் செய்யுட்களின் முதல் நினைப்புக் காரிகை**

கந்தமுந் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில் குறிலே
சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

(கந்தமும்[1] தேனும்[2] சுருக்கமும்[3] காதல் குறில்[4] குறிலே[5]
சந்தம்உந்து ஈரசை[6] தேமா[7]த்தண்[8] குன்றம்[9]தண் சீர்[10]திருவும்[11]
கொந்தவிழ் கோதாய் குறள்[12]திரை[13] வெள்ளைக்கு[14] அறத்து[15]எழுவாய்[16]
அந்தமும்[17] மாவும்[18] இருசீரும்[19] மோனையும்[20] ஆம்உறுப்பே.

**(இ - ள்)** கட்டவிழ்ந்து தேன் சொரியும் இனிய மாலையினை அணிந்த பெண்ணே! 1. கந்தம் 2. தேனார் 3. சுருக்கமில் 4.குறில்நெடில் 5. குறில்நெடிலே 6. ஈரசை 7. தேமா 8. தண்ணிழல் 9. குன்ற 10. தண்சீர் 11. திருமலை 12. குறள்இரு 13. திரைத்த 14.வெள்ளைக்கு 15. அறத்தாறு 16. எழுவாய் 17. அந்தம் 18.மாவும் 19. இருசீர்மிசை 20 மோனை எனத் தொடங்கும் காரிகை இருபதும் உறுப்பியலில் இடம் பெற்றவையாகும்.)

உறுப்பியல் முற்றும்

*********************